
சனிக்கிழமை கவிதைகள்
வினவு தளத்தில்
வெளியான
கவிதைகளின்
தொகுப்பு

வினவில் ஒவ்வொரு சனிக்கிழமையும் வாசகர் கவிதைகளை வெளியிடலாமென்று ஒரு யோசனை! பொதுவில் தமிழ்க்கவிதை உலகம் வாரமலர் வகையில் அரட்டையாகவும், வைரமுத்து வகையில் இரவில் பிறந்தோம் இன்னும் விடியவே இல்லை என்று வார்த்தை அலங்காரமாகவும், சிறுபத்திரிகை வகையில் போலி மன அவஸ்தை புலம்பலாகவும், பெண்ணிய வகையில் ஈராக் மீதான அமெரிக்காவின் போர்கூட பெண்ணுடல் மீது ஆண் கொண்ட உரிமையென்ற உளறலாகவும், த.மு.எ.ச வகையில் பழங்கஞ்சி ஞாபகமாகவும் சலிப்பூட்டுகிறது. புரட்சி குறித்த விருப்பார்வம் கொண்ட பல கவிதைகளும் கூட முழக்கங்களாகவோ பிரகடனங்களாகவோ சுருங்கி விடுகின்றன. மொத்தத்தில் கவி உலகம் தனித்துவமான ஆழ்ந்த சமூக அனுபவக் கிளறலின்றி அழுது வடிந்து கொண்டிருக்கிறது.

புழங்கும் எல்லா கலைகளிலும் கவிதை எழுதுவது மிகவும் சுலபமாகிவிட்டது. ஒரு பேப்பரும், பேனாவும், மழைக்காலம் போன்ற குதூகலமான காலநிலையும், மனைவி தரும் சரியான காப்பித் தண்ணியும், இருந்தால் பத்துவரியில் ஒரு ஆண் கவிதை தயார். உரையாடலையும், பொருளையும், வார்த்தை சேர்க்கைகளையும் மாற்றிப்போட்டால் கவிதை சுலபமாக யாருக்கும் வந்து விடுகிறது. இதன் காரணமாகவே கவிதை மட்டும் எழுதுவோர் மீது எமக்கு அவ்வளவாக நல்ல அபிப்ராயம் இருந்ததில்லை. கவிமணிகள் சண்டைக்கு வரவேண்டாம்.

ஒரு அழுத்தமான கவிதை ஒரு தாயின் பிரசவ வேதனையைக் கொண்டிருக்க வேண்டும். பல மணிநேர அவஸ்தைகளுக்கு ஈடுகொடுத்து அதை வெடிக்க வைக்கும் தருணத்தில் கச்சிதமான வார்த்தைகளையும், படிமங்களையும் அழுந்தக் கோர்த்து எழுதிப் பார்க்க வேண்டும். படிப்பவர்களின் இதயத்தை அசைத்து மூளையில் ஒரு புதிய அனுபவத்தை, “நாமோடு” முரண்படும் “நானின்” சுயவிமர்சனத்தை, மனதில் கரையாமல் தங்கி வினையாற்றும் வகையில் வேதியியல் சேர்க்கையை கவிதை கொண்டிருக்க வேண்டும்.

நல்ல கவிதைகள் படித்து நாளாயிற்று என்று புலம்பிக் கொண்டிருப்பதால் எந்தப் பயனுமில்லை. வினவின் வாசகர்களிடமிருந்து நல்ல கவிதைகள் வரக்கூடும் என்ற நம்பிக்கையிலிருந்தே இந்த யோசனை!

எழுதுங்கள். முழக்கங்களை கவிதைகளாக்கும் முயற்சி வேண்டாம். சமூக, பண்பாட்டுக் கவிதைகளில் தேறும் போதே நல்ல அரசியல் கவிதைகள் பிறக்கும். மற்றவருக்கு உபதேசம் செய்யும் வகையில் எழுதுவதைத் தவிர்த்து நாம் ஏன் அப்படி இல்லை, அல்லது அப்படி இருக்கிறோம் என்ற சுயவிமர்சனத்தை கவிதை அனுபவமாக எழுதுங்கள். உங்கள் வேலை,

குடும்பம், நட்பு, பிரிவு, தோழமை இதன் கள, காட்சி, இயக்க, நினைவு முரண்பாடுகளை கவிதையாக்குங்கள்.

வினவில் சனிக்கிழமை தோறும் கவிதைகள் வெளியிடுவோம். மற்றபடி ஒரு கவிதை ஏன் பிரசுரமானது, ஏன் பிரசுரமாகவில்லை என்று நீங்கள் கேட்பதும் நாங்கள் அதற்கு பதில் சொல்வதும் சாத்தியமில்லை. இதைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறோம். கூடவே புதிய கலாச்சாரத்தில் வந்த மற்றும் சில மொழிபெயர்ப்பு கவிதைகளையும் இத்துடன் இணைத்து வெளியிடுகிறோம். அவை கற்றுக் கொள்வதற்கு பயன்படும். எந்த அளவுக்கு நாம் ஏராளமான நல்ல கவிதைகளை படிக்கிறோமோ அந்த அளவு நாம் ஏன் எழுத வேண்டுமென்ற கேள்வி, தயக்கத்திலிருந்து நல்ல கவிதைகள் பிறக்கும்.

விரைவில் வினவின் வாசகர்களில் சிலர் நல்ல கவிஞர்களாக உருவாவார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம். கவிதைகளை மின்னஞ்சலில் அனுப்புங்கள்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

இந்த அறிவிப்பை ஒரு நல்ல கவிதையுடன் ஆரம்பிக்க வேண்டுமென்பதால் இங்கே ஒரு கவிதை!

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்று நிகாரகுவா. 1979 ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் நாள், நிகராகுவாவின் சர்வாதிகாரியும், அமெரிக்க உதவியுடன் ஆட்டம் போட்டவனுமாகிய அனஸ்டூசியோ சமோசாவின் ஆட்சி வீழ்த்தப்பட்டு மக்கள் வெற்றி கண்ட மகத்தான நாள். இத்தேசியப் புரட்சியில் பங்கு கொண்ட இடானியா என்ற பெண் போராளி 8.3.1979 தேதியில் தனது மகளுக்கு எழுதிய கடிதம் கீழே தரப்படுகிறது. 16.4.1979 அன்று சமோசாவின் இராணுவத்தால் கொல்லப்பட்டபோது இப்போராளியின் வயது 26

## இடானியாவின் கடிதம்!

எனது அன்பு மகளே,

எல்லா இடங்களிலும் மக்களுக்கு
இது ஒரு முக்கியமான நேரம்.
இன்று நிகராகுவாவில்,

நாளை பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில்,
பிறகு உலகம் முழுவதும்.

புரட்சி
ஒவ்வொருவராலும் தரமுடிந்த அனைத்தையும் கோருகிறது.
நமது மனசாட்சியும்தான்.

தனி மனிதர்களான நாம் பிரத்யேகமாகச் செயல்பட்டு
இந்த உருவாக்கத்தில் இயன்றளவு,
உதவிடவேண்டி வலியுறுத்துகிறது.

விரைவிலேயே ஒருநாள்
சக மனிதர்களைப் போல வளர்ந்து முன்னேறி,
விரோதிகளாக அல்லாமல், சகோதர சகோதரிகளாக
சுதந்திரமான சமூகத்தில் வாழ்வது,
உனக்கு சாத்தியமாகுமென்று நம்புகிறேன்.

அப்போது உன்னுடன் கைகோர்த்து வீதிகளில் செல்லும்போது
எல்லோரும் புன்னகைப்பதை குழந்தைகள் சிரிப்பதை
பூங்காக்கள் நதிகளையெல்லாம் பார்க்க விரும்புகிறேன்.

நமது மக்கள் மகிழ்ச்சியான குழந்தைகளாக வளர்வதையும்,
புதிய மனிதர்களாகவும்
எங்குமுள்ள மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை
உணர்ந்தவர்களாக மாறுவதையும் கண்ணுற்ற நாம்
மகிழ்ச்சியுடன் புன்னகை செய்வோம்.

நீ அனுபவிக்கப் போகும் அமைதியும், சுதந்திரமும் கொண்ட
சொர்க்கத்தின் மதிப்பை நீ அறிந்து கொள்ள வேண்டும்.
நான் ஏன் இதைச் சொல்கிறேன்?

ஏற்கனவே நமது மக்கள் வீரத்தில் சிறந்தவர்கள்.
சமூகத்தின் மீதும், சுதந்திரத்தின் மீதும், அமைதியின் மீதும்,
தமக்குள்ள ஆழ்ந்த அன்பினால்,
நாளைய தலைமுறையினருக்காகவும்,
உன்னைப் போன்ற குழந்தைகளுக்காகவும்
தங்கள் ரத்தத்தை தந்துவிட்டார்கள்,
மிக்க விருப்பத்துடன்.

நமது அழகான நிகராகுவாவின்
எத்தனையோ ஆண்களும், பெண்களும், குழந்தைளும்,
அடக்குமுறையிலும், அவமானத்திலும், வேதனையிலும்
துடிப்பது போல இனி ஒரு போதும் துடிக்கக் கூடாது
என்பதற்காக
அவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்துவிட்டார்கள்.

ஒருவேளை நான் இவற்றையெல்லாம்
உன்னிடம் நேரில் சொல்லமுடியாமல் போகலாம்.
வேறொருவர் சொல்வதும் முடியாது போய்விடலாம்,
என்பதால் உன்னிடம் சொல்கிறேன்.

அன்னை என்பவள் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பவள் மட்டுமல்ல,
எல்லாக் குழந்தைகளும் தனது கருப்பையிலிருந்து தோன்றியவர்கள் போல,
எல்லா மக்களின் வலிகளையும்
அன்னை என்பவள் நன்கு அறிவாள்.

ஒரு நாள்
நீ
மனித குலத்தின் மீது பேரன்பு கொண்ட
உண்மையாக பெண்ணாக உருவாக வேண்டும்
என்பதே என் விருப்பம்.

நீதியை யார் எப்போது குலைக்க முயன்றாலும்,
அதை எதிர்த்து நின்று காப்பது எப்படி என்று
உனக்கு எப்போதும் தெரிந்திருக்க வேண்டும்.

அப்படி நீ மாறவேண்டுமானால்,
நாம் நாட்டுப் புரட்சியின் தலைவர்களும்,
பிறநாட்டுப் புரட்சியின் மாபெரும் தலைவர்களும்
எழுதிய புத்தகங்களை
நீ படித்துப் புரிந்து கொள்ளவேண்டும்.

அனைத்திலும் சிறந்தவற்றை தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்தி
அதன் மூலம் வளர்ச்சியைத் தொடர வேண்டும்.
நீ இதைச் செய்வாய்!
உன்னால் முடியுமென்று எனக்குத் தெரியும்.

உனக்கென
வார்த்தைகளையும், வாக்குறுதிகளையும், வெற்றுப்போதனைகளையும்
விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை.

உனக்கென நான் விட்டுச்செல்ல நினைப்பது
வாழ்க்கை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை.
என்னுடையதையும்
(அதுதான் சிறந்தது என்று நான் நினைக்கவில்லை என்றாலும்)
எனது சான்டினிஸ்டா சகோதர ஸ்ரீ சகோதரிகளுடையதையும்
உனக்கு விட்டுச் செல்கிறேன்.
அதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று
நீ கற்றுக் கொள்வாயென்று எனக்குத் தெரியும்.

சரி, என் குண்டுப்பெண்ணே,
உன்னை மறுபடியும் பார்க்கும் பேறு எனக்கு கிடைத்தால்?
அதுகூட சாத்தியம்தான்.
வாழ்க்கை பற்றியும் புரட்சி பற்றியும் நாம் நீண்டநேரம் பேசுவோம்.

நமக்குக் கொடுக்கப்படும் செயல்களை
கடினமாக உழைத்து நிறைவேற்றுவோம்.
கிடார் வாசித்து, பாட்டுப்பாடி ஒன்றாக விளையாடுவோம்.
ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்கொள்வோம்.

வா,
பூவையும் சுதந்திரத்தையும் போன்ற
உன் அழகு முகத்தை எனக்குக்காட்டு!

உன் சிரிப்பையும் நமது யதார்த்தத்தையும் பிணைத்து
நான் போராடுவதற்கான சக்தியைக்கொடு!

தினமும் உன்னைப்பற்றியே நினைக்கிறேன்.
நீ எப்படியிருப்பாய் என்று கற்பனை செய்கிறேன்.

எப்போதும் உன் மக்களை
மனித குலத்தை நேசி!
உன் அம்மாவின்
அன்பு முழுவதும் உனக்கே!

**இடானியா.**

"என்றென்றைக்குமான வெற்றி கிட்டும் வரை
சுதந்திரத் தாய்நாடு அல்லது வீரமரணம்"

*("சான்டினோவியப் புதல்விகள்" ஆங்கிலப் புத்தகத்திலிருந்து மொழிபெயர்ப்பு: அமரந்தா.) புதிய கலாச்சாரம், ஜனவரி' 2000*

*இருபத்தி ஆறு வயது போராளி இடானியா தனது மகளுக்கு எழுதிய கடிதம்தான் இது. கடிதத்தை கவிதை வடிவில் மாற்றியிருக்கிறோம். வாழ்வின் முழுமை பற்றியும், கடமை பற்றியும், தனிப்பட்ட நேசத்தைக் கூட சமூக உறவின் வெளிச்சத்தில் நேசிக்கும் இந்த இளம் போராளியின் வார்த்தைகளும், வரிகளும் செயலற்றவர்களின் பாதுகாப்பான இதயத்தை உலுக்குகிறது. அவளது சிறிய குண்டுப் பெண்ணுடன் கிடார் வாசித்து புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற நினைக்கும் எதிர்பார்ப்பு கண்ணீரை வரவழைக்கிறது. ஆம். நல்ல கவிதைகள் கவிதைகளாத்தான் எழுதப்பட வேண்டுமென்பதில்லை. அது போராட்டத்திலிருக்கும் வாழ்க்கையிலிருந்தும் பிறக்கலாம்.*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆



**தோழர் இடானியா - 1976**

# மரித்திருக்கும் நபியின் சகோதரத்துவம்

வார்த்தைகள்
வார்த்தைகள்
வார்த்தைகள்

வார்த்தைகளின்
குவியலில்
பிதற்றலாய்,
ஆவேசக் கூச்சலாய்,
அரற்றலாய்,
செவிமடுக்க மறுக்கும்
ஊளையிடலாய்,
கண்களை இறுக்க
மூடிக் கொள்கிறது,
இறுமாப்பின் நியாயம்.

நீ தாழ்த்தப்பட்டவன்!
உனக்கு சுடுகாடு இல்லை.
நீ அஹமதியா!
உனக்கு சுடுகாடு இல்லை.
நதிகள் பிறக்குமிடம் பலவாகும்.
எல்லா நதிகளும் கலக்குமிடம்
கண்மூடித்தனமான வெறியின்
கடலாகும்.

பிணத்தை தோண்டியெடுத்து
மார்க்கத்தை நிலைநாட்டும்
புனிதத்தின் காவலர்களே,
சுடுகாடுகளை
பத்திரமாக பாதுகாத்து வையுங்கள்.
அங்கேதான்
ஏதோ ஒரு மூலையில்
தோண்டியெடுக்க வழியில்லாமல்,
நீங்கள் ஆழக்குழிதோண்டி புதைத்து விட்ட

நபியின் சகோதரத்துவம்
மரித்துக் கிடக்கிறது.

**போராட்டம்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## தாராளமயம்

பக்கத்து வீட்டுக்காரன்
மிக நல்லவன்!
என் குழந்தைக்கான
என் மனைவியின்
முலைப்பாலை
மலிவு விலையில்
எங்களுக்கே விற்கிறான்.

**இரங்குவோன்.**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## செய்தித்தாட்கள்

அரசுகள் போடும் பிச்சை விளம்பரமும்
சிறுசுகள் நாடும் கொச்சை எழுத்துக்களும்
எங்கள் மூலதனங்கள்.

நாங்கள்
வந்தவருக்கெல்லாம் வால் பிடிப்போம்
கால் பிடிப்போம்
எங்களுக்கு விமரிசிக்கத் துணிவில்லை
வேண்டுமானால் வேண்டுகோள் விடுவோம்.

எங்கள் இலவச இணைப்புக்கள்
மக்களின் மனோதத்துவ அவலங்கள்

நடிகைகளின் அரை நிர்வாணப் படங்கள்
எங்கள் விற்பனையைக் கூட்டும்.

காமதேனுப் பசுக்கள்
எங்கள் போட்டிப் பரிசு ஞ் அறிவிப்புக்கள்
உங்கள் ஏமாளித்தனங்களின் எடுத்துக்காட்டுகள்.

நாங்கள் ஆபாசத்தை விதைக்கிறோம்
நீங்கள் அறுவடை செய்கிறீர்கள்.

எங்களுக்குள் அடித்துக் கொள்வோம்
உங்கள் வயிற்றிலடித்து
ஓய்ந்த நேரங்களில்.

**-ந.அப்துல் ரகுமான், ( புதிய கலாச்சாரம், நவம்பர்' 1991 )**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## கசியும் உயிர்

கானகத்து மிச்சமாய்
கடந்த காலத்தின் எச்சமாய்
கல்லூரியின் கருத்த மூலையில்
கம்பீரமாக
நெருப்பின் மலர்களை வீசி
காற்றைக் கொளுத்தி
கதிரவனைக் கலங்கடிக்கும்
அந்த
மஞ்சள் கொன்றை,

இன்று மௌனமாக
தலை குனிந்து
தன் உடல் வழியே

வழிய விடுவதை
மழை நீர் என்கிறாய் நீ!

இல்லை நண்பா
இல்லை!

மண்ணைத் தொட்ட
நீரின் சிலுசிலுப்பில்
வேர் சிலிர்க்கும் முன்பே,

நீரூற்று பாறைகளின்
வேர்க்கால்களை துளைத்த
பெப்சியின் ஆழ்துளை பைப்புகள்,
வானத்தின் ஈரத்தை
களவாடும் ஈனத்தை
உணர்த்த ஞீ உனக்கு
உணர்த்த
கசிய விடுகிறது
தன் உயிரை
கிளை வழியே
இலை வழியே!

**– விடிவெள்ளி**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## ஆண்டவனிடம் சில ஐய்யங்கள்!

அன்பில்லா இறைவனுக்கு!
ஒரு வேளை
நீ இருந்துவிட்டால்
எனும் சந்தேகத்தோடு
தொடர்கிறேன்

பாவம்,புண்ணியம்
இன்பம்,துன்பம்

நன்மை,தீமை
இவையெலாம்
உன் பார்வைக்கு
உட்பட்டவையே

நீதான் உயிர்களை
படைப்பதாய்
புராணமும் தன்
புழுகலை
காலத்தின் மீது
தடவிக்கொண்டே வருகிறது

பின் ஏன்
நல்லவன்,கெட்டவன்
உயர்ந்தவன்,தாழ்ந்தவன்
ஏழை,பணக்காரன்
நோயாளி,சுகவாசி
என்ற
துருவ வித்தியாசங்கள்?

படைக்கும் போதே
நல்ல ஜீன்களை
விதைத்து
கெட்ட ஜீன்களை
விடுக்கும்
வித்தை தெரியவில்லையா
உனக்கு?

எத்தனையோ யுகங்கள்
கழிந்த பின்னுமா
உன்
விஞ்ஞான அறிவில்
விருத்தியில்லை?

உன் பெயர்
சொல்லித்தானே
நீ படைத்த உயிரை
நீ படைத்த உயிரே
கொன்று குவிக்கிறது

இதுதான் உன்
படைப்பிலக்கணமா?

நீ மட்டும்
நினைத்த போதெல்லாம்
அவதாரம் எடுத்து
அற்புதம் நிகழ்த்தி
அசத்தல் நாயகனாய்
அச்சேறிவிட்டாய்..

காதல்,காமம்
கேலி,கிண்டல்
என
சுவாரஸ்ய வாழ்வை
தொடர்கதையாக்கினாய்

ஆனால்
உன்
தொண்டர்கள் மட்டும்
நிறைந்த ஏக்கங்களோடு
கிழிந்த கோவணங்களாய்

நடிகனுக்கும் உனக்கும்
என்ன வித்தியாசம்?
நடிகனின்
அவதாரத்தை
ரசிகன் ரசிக்கிறான்
தன் மானம் கிழிந்ததை
மற்றையோர்
ரசிப்பதுகூட தெரியாமல்

உன் தொண்டர்களும்
அப்படியே
இருப்பினும்
நடிகன் என்பவன்கூட
நிஜமாகிறான்
கண்கூடாய் சில
நல்லவை செய்வதால்

ஆனால் நீயோ
இல்லாதவன் என்று
தெரிந்தபோதும்
இருப்பதாய்த்தானே
இலக்கியம் விரிகிறது

ராமராகவும்
யேசுவாகவும்
நபிகளாகவும்
புத்தராகவும்
என் அவதாரங்கள்
தொடர்ந்து கொண்டேதான்
இருக்கும் எனும்
உனது
கட்டுக் கதைகளை
இனி நம்பத்
தயாராக இல்லை

இது கலியுகம் அல்ல
பலியுகம்
உணர்வுகள் பிதுங்கிய
வலி யுகம்
உன்னை நினைக்கும்
அந்தக்
கணங்களில்கூட
எங்கள்
கால்களின் கீழே
குண்டுகள் வெடிக்கக் கூடும்

ஆதலால்
எங்கள்
கவனம் முழுதும்
எச்சரிக்கை நோக்கியே

ஆலயங்கள் தோறும்
அபாயங்கள்
இருப்பதாய்த்தான்

எங்கள் குழைந்தைகள்
கற்றுக்கொள்கிறார்கள்

மத அடயாளங்கள்
மரணத்தின்
வாசற் கதவுகள்
என்பதைப்
புரிந்துகொண்டுவிட்டோம்

ஆதலால்
ஒன்று செய்..
ஒன்று
நல்லதோர்
உலகைக் கொடு
இல்லையேல்
உன் ராஜினாமாவை
நீயே பகிரங்கப்படுத்து.

ஆம்!
ஒட்டுமொத்த உயிர்களும்
உன் மீது
நம்பிக்கையில்லாத்
தீர்மானம்
கொண்டுவரும் நாள்
வெகு தொலைவில் இல்லை

**-ஷான் சிவா**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## நிலம் பெயர்ந்தலைய வந்துவிடு!

பிழைத்துப்போன களம் உன்னை
கொண்டுபோய் நிறுத்தி வைத்திருக்கிறது.
நீ கொண்டு செல்ல வேண்டிய
பை கிடக்கிற கடற்கரையில் காற்று திரளுகிறது.

விளையாடுகிற முத்தமற்று
சைக்கிளில் திரிகிற ஒழுங்கையற்று
வாழ்வை யுத்தம் ஒடுக்கியருக்க
உன்னை களம் கொண்டுபோயிற்று.
திணிக்கப்பட்டிருக்கிற துவக்கு
உன்னைத்தான் தின்றுகொண்டிருக்கிறது.

அண்ணாவின் கல்லறைதான்
ஒரு சொத்தென இருந்தது.
அண்ணாவின் கனவு கலைக்கப்பட்டிருக்க
கல்லறையும் தகர்ந்து போயிற்று.
இப்பொழுது வீடு இல்லை
எங்களில் யாரும் வாழ்வதற்கு.
அண்ணாவைப்போலவும்
அவனின் கனவைப்போலவும்
அலைந்துகொண்டிருக்கிறோம்.

எல்லாவற்றையும் இழந்து
அலைந்து ஒடுங்கியிருக்கிற
அச்ச மூட்டுகிற இராத்திரிகளில்
பொத்தி வைத்திருந்த
உன்னை இழுத்துச் செல்லப்படுகிற
எங்கள் விதியை என்ன செய்வது?

எங்களை அலைத்துக்கொண்டிருக்கிற எதிரியை
நீ எப்படி சுடுவாய்?
எவற்றையும் உணர முடியாத
அறிந்திருக்காத வயதில்
உனக்கு யுத்தம் தரப்பட்டிருக்கிறது.
கையில் தரப்பட்டிருக்கிற துவக்கு
பிஞ்சு மனதை வேகவைத்துக்கொண்டிருக்கிறது.
எதிரியிடம் சரணடைகிறது எஞ்சிய நிலம்.

இப்படி ஒரு கவிதையும்
இப்படி அச்சம் தருகிற இராத்திரியும்
ஏன் என்னை நெருங்கின.
கடைசியில் பொய்த்துப்போய்
கிடக்கிறது எனது சொற்கள்.

இனி குழந்தைகள் போரிடுகிற களம் பற்றி
நான் ஒரு பரணியெழுதுகிறேன்?

ஷெல்களின் மத்தியில் சேர்ந்துகொண்டு
நடுங்கியபடியிருக்க நீ வேண்டும்?
யார் உன்னை இழுத்துச் சென்றனர்?
அண்ணாவைப்போல அவர்கள் இருந்தனர்.
அண்ணா நமது தேசத்தைப்போலவே
உன்னையும் மிகவும் நேசித்திருந்தான்.

குழந்தைகள் துப்பாக்கிகளில் மறைந்திருந்தனர்
என்று அம்மா சொல்லுகிறாள்.

இப்பொழுது நமது நகரமும் இல்லை.
வாழ்வுமில்லை.
எதுவுமற்ற நாமும் இல்லை.
எனினும் நீ வேண்டும்
அவியாத கொஞ்ச சோற்றையும்
தண்ணிரில் அவித்த பருப்பையும் தின்பதற்கு.

விரைவாக வந்துவிடு
நாம் மேலும் நிலம் பெயர்ந்தலைவோம்.

(20.04.2009 தங்கச்சி வேங்கனிக்கு)

**–தீபச்செல்வன்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## அந்திநேர பூபாளம்!

இனிமையாகத்தான்
இருந்திருக்கும்
எல்லாருக்கும்

எப்போதாவது,
சொந்த ஊருக்குச்
செல்வதென்பது!

ஏதோ,
இழவு வீட்டிற்குச்
செல்வது,
போன்ற துயரம்
கவ்விக் கொள்கிறது
எனக்கு மட்டும்!

யாரைப் பார்த்தாலும்,
"என்ன பொழப்பு இது,
செத்த பொழப்பு"
என்று அலுத்துக் கொள்ளும்,
ஊருக்குத்
துள்ளிக் கொண்டா
போகமுடியும்?

கடலை விளைந்த,
சாலையோர வயல்கள்
எல்லாம்,
கல்லறை போல,
கற்கள் முளைத்து,
காமாட்சி, மீனாட்சி
என புதிய நகர்களைப்
பிரசவித்திருக்கின்றன!

கரம்பு வயல்களில்,
கணுக்கள் வெட்டப்பட்டு,
கழுத்து வலிக்குமளவு,
வளர்ந்து நிற்கின்றன,
சவுக்கு மரங்கள்
காகித ஆலைகளுக்கென!

நான்கைந்து வாரங்களாய்,
தண்ணீரின்றி,
நாசமடைந்து நிற்கிறது

நவீனக் கரும்பு வயல்,
நாற்பதாயிரத்தை விழுங்கிவிட்டு!

தாய் மனத் தலைவனின்
பால்விலை உயர்வுச்
செய்தியைக் கூட அறியாமல்,
துருத்திய எலும்புகளுடன்
தேடியலைகின்றன
காய்ந்த புற்களை,
பால் வற்றியப் பசுக்கள்!

ஊரே சுடுகாடு போலக்
காட்சியளித்தாலும்,
உள்ளூர சந்தோசம்தான்
இன்னும் யாருமே
தூக்கில் தொங்கவில்லை!

கடனை வாங்கியாவது,
கல்லைக் குடைந்து
நீர் பார்க்கத்
துடிக்கிறார்கள்
எல்லாருமே!

ஊரே நாறும்போது,
வீடுமட்டும்
மணக்குமா என்ன?

கால் நூற்றாண்டாய்,
காடு மேடெல்லாம் சுற்றிக்,
குருவி போல் சேர்த்து,
கடன்பட்டு வாங்கிய
காடு முழுவதும்,
காய்ந்து கிடக்க,
கால் மூட்டுத்
தேய்ந்து போய்,
கருக்கரிவாள்களை
எல்லாம்,
துருப்பிடிக்க விட்டபடி,
கனவு காணும் பெற்றோர்களே!

அடித்துப் பிடித்துப்
படிக்க வைத்த
அருமை மகன்,
அரசு வேலையோடு
வருவானென!

ஆயிரம் பேரில்
ஒருவனுக்கு,
வேலை தரவே,
ஆறேழு வருடம்
யோசிக்கும்
அரசாங்க யோக்கியதை
அவர்களுக்கெப்படித் தெரியும்.

விவசாயி வாழ்வே
வெறுங்கனவாகிப் போன பின்பு
நடுமண்டியில் உறைக்கிறது
நாட்டு நிலைமை!

விரக்தியின் விளிம்பில்,
வெறுபேறிப் போனவர்களாய்
தூக்குக் கயிற்றை,
முத்தமிட்டு,
வீரர்களாகிறார்கள்
விவசாயிகள்.

அந்த,
நல்வாய்ப்பை நல்கி
நாடெங்கும்,
பசுமையே இல்லாமல்
செய்தவர்கள்
பசுமைப் புரட்சியின்
தந்தைமார்கள்!

இவர்கள்,
இளைஞர்களை
கனவு காணச் சொல்லிவிட்டு,
இந்திய இதயங்களின்
கனவுகளை,

கருவறுத்தவர்கள்
முதுகெலும்பை
முறித்துப் போட்டவர்கள்.

இவர்கள்,
பரிந்துரைத்த,
விதைகளின் வீரியம்
பிரதிபலிக்கிறது
தரிசு நிலங்களில்,
விதவிதமாய்
முளைத்திருக்கின்றன
களைச் செடிகள்,
கட்சி கொடிகள் போல,
பிடுங்குவாரின்றி!

வயலில் அடிக்கும் போது
வேலை செய்யாத
பூச்சிக் கொல்லி கூட
வஞ்சனை செய்கிறது
விவசாயி குடிக்கும் போது!

வெகு வேகமாய்
அழிக்கப்படுகிறது
விவசாயி வர்க்கம்!
விதவிதமாய்ப்
புள்ளி விவரங்கள்
செத்தவர்களைப் பற்றித்தான்!

கணக்கெடுக்க
வக்கின்றி,
விழி பிதுங்கிறது,
வீணர்களின் அரசாங்கம்!

ஒற்றை அஸ்தமனத்தில்,
முடிந்து போவதில்லை
விடியல்கள்!

அழிந்து விடவில்லை
இளைய தலைமுறை!

எவ்வளவு
நாளைக்குத்தான்

மறைத்து வைப்பீர்கள்
கருக்கரிவாள்களை!

அவர்கள்
தயாரில்லை!

அறுவடையைத்
தள்ளிப் போட!

**– விடிவெள்ளி**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## நிறைவேறாத கனவு

நிறைவேறாத கனவு
என்னவாகிப் போகிறது?

வெயிலில் காய்ந்து சுருங்கும்
திராட்சையைப் போல்
உலர்ந்து போகிறதா?

அல்லது
ஒரு புண்ணைப் போல
சீழ்பிடித்துப்
பின் மறையுமோ?
கெட்டுப்போன
மாமிசத்தைப் போல
நாற்றமடிக்குமோ?

அல்லது
பாகு நிறைந்த
இனிப்பைப் போல்
சர்க்கரை பூத்துப் போகுமோ?

ஒருவேளை
கனமான ஒரு சுமை போல
தளர்ந்து
தொங்கிப் போய்விடும்
போலிருக்கிறது!

அல்லது
கனவு
வெடிக்குமா?

**–லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ், அமெரிக்கா**
*தமிழாக்கம்: இந்திரன்,*
*கவிதை இடம் பெற்றுள்ள நூல்: "அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்"*
*புதிய கலாச்சாரம், நவம்பர்' 2000.*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## உயிர்த்தெழு !

மௌனத்தை உடை.
மர உதடு திற.
பேசு!

பூமியின் புன்னகையை
மீட்டுத் தரும்
வேட்கையோடு

முள் முளைத்த மரபுகளை
முறித்தெறியும் வேகத்தோடு
பேசு!

கலைகளின்
ஒப்பனைகளைக் கழற்றி
நிகழ்வின் காயங்களை
வலியின் கனத்தோடு
விவரி!

பூவெறிந்து
பாவெறிந்து
கண்ணீர் எறிந்து

கற்களைக் கரைக்கும்
முயற்சியைத் துற.

அர்த்தங்களின்
அடர்த்தி குறையாத
ஆவேசத்தோடு
வீசு சொற்களை!

வேர்வரை விழுட்டும்
மடமைகள்.

இயல்களைத்
தெரிந்து கொள்.
இசங்களைப்
புரிந்து கொள்.

பேசு!

சீழ் பிடித்த
சிகரங்களின் உள்ளழுக்கை
உண்மை விரல்களால்
தொடு.

முகவரிகளின்
அகவரிகளை ஆய்வு செய்!

உன்னை
இயல்பாய் வெளிப்படுத்து.

பேசு!

ஞானவெறி கொள்!
ஞாலவெளி பற.

–**மறைந்த தோழர் தீபன்,** புதிய கலாச்சாரம், மே' 2000

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# மண்ணிறங்குகிற கால்கள்

பந்து எட்டாத தூரத்திலிருக்கிறது
கால்கள் இறங்காமல்
எப்பொழுதும் தூக்கி மடக்கி வைத்திருந்தபடி
அவள் எல்லாருடைய கண்கள் வழியாகவும்
நடந்து செல்லுகிறாள்.
பதுங்குகுழி உடைந்து
மண் விழுகையில்
தனது கால்கள் மேலும் நசிந்தன என்கிறாள்.

கால்களை ஷெல் கிழித்த பொழுது
தனது கண்கள் குருதியில்
நனைத்து கிடந்தன என்று கூறியபடி
சக்கரத்தை உருட்டுகிறாள்.

எனது கால்கள் இல்லாததைப்போலிருக்கின்றன.
நடப்பதற்கு ஆசைப்படுகிற
கால்கள் எப்பொழுதுமே தொங்குகின்றன.
மண்ணிறங்கும் கால்களுக்காக கனவு
காணுகிற இராத்திரிகளில் அவளது மனம்
நாற்காலியின் கீழாக தூங்குகிறது.

எப்பொழுதும் எங்கும் உருள மறுக்கிற
சக்கரங்களுடன்
யாரையாவது உதவிக்கு அழைத்தபடி
குழந்தைகள் விளையாடுகிற இடத்தின்
ஓரமாய் நிற்கிறாள்.
எட்டுவயது சிறுமி நற்காலியை நகர்த்துகிறாள்
கால்கள் நிரம்பிய பெரிய மனிதர்களின் மத்தியில்.

கால்கள் வளரும் என்று கூறுகிற தாயின்
சொற்கள் பொய்த்துவிடுகிறதாக
சொல்லிவிட்டு சிதல் கசியும்
காயத்தை காட்டுகிறாள்.

எல்லாம் ஒடுங்கியபடி
தங்கியிருக்கிறது அவளது உலகம்.
தனது கால்களை உடைத்து
தன்னிடமிருந்து
நடை பிரிக்கப்பட்டது என்கிறாள்.
மண்ணிற்குள் இறங்கிப்போயிருந்தது
அவளின் அம்மாவின் கால்கள்.

அவள் அறியாதபடி
கற்களின் மேலாகவும் கிடங்குகளிலும்
அந்தச் சக்கரங்கள் உருளுகின்றன.
அவளுக்கு முன்னால்
பெருத்த கால்கள் பெரிய அடிகளை வைத்தபடி
எங்கும் நடந்து திரிகின்றன.
தனது கால்களை தூக்கி மடியில் வைத்திருக்கிறாள்.

**தீபச்செல்வன்**

*(12.09.2009 அன்று வவுனியா கதிர்காமர் தடுப்புமுகாமலிருந்து அழைத்து வரப்பட்ட எட்டுவயதுச் சிறுமி கைதடி தடுப்பு முகாமில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்ருடிக்கிறாள். ஷெல் தாக்குதலில் கால்கள் பழுதடைந்திருப்பதால் நடப்பதற்கு முடியாமல் சக்கர நாற்காலியை உருட்டியபடி திரிகிறாள்)*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## முள்கம்பி வேலிகள்!

ஒவ்வொரு நாளும்
செய்தித்தாள் வரிகளில்
இந்த இரண்டு சொற்களில்
நின்று தயங்குகின்றன
கண்கள்.
உறைந்து நிற்கும்
புகைப்படத்திலிருந்து

ஒரு மௌன ஓலம்
மெல்ல எழும்பி
காதுகளை அடைக்கின்றது.
சட்டெனக் கடந்து
தாள் திருப்புகையில்,
சடாரென அடங்குகிறது
வலி.

செய்தித்தாளை
மூடி வைக்கையில்
கண்களுக்குள் மெல்ல எழும்பும்,
ஒரு கப்பல்!

ஆப்பிரிக்காவில் பிடிக்கப்பட்ட
கறுப்பின அடிமைகள்,
சரக்குகளோடும், கால்நடைகளோடும்
கொத்தாக மூட்டை கட்டப்பட்டு,
அமெரிக்காவிற்கு பயணிக்கும்
ஒரு கப்பல்!

நான் வாழாத காலத்தின்
வரலாற்றுக் காட்சி விரிதலின் தொடர்ச்சியில்,
திடீரென கண்களை உறுத்தி
பிரக்ஞையை கேள்விக்குள்ளாக்கும்,
கப்பலைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும்
முள்கம்பி வேலிகள்.

அவ்வேலிகளில் மோதும்
காலத்தின் குடுவை
நிலைகுலைந்து மிதக்கும்.

அதோ,
வருங்காலத்தில் ஒருவன்
இன்றைய செய்தியை
வரலாறாக படித்துக் கொண்டிருக்கிறான்.
அவனது கண்களில் அதிர்ச்சியும்,
குரலில் ஆத்திரமும் பொங்க
என்னை நோக்கி கத்துகிறான்.

**"நீங்கள் எல்லோரும் அப்பொழுது
என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"**

நிகழ்காலத்தின் மௌனம்
வருங்காலத்தின் மரணமாக மாறி நிற்கும்.
ஆனால், அவனது கேள்வி
வருங்காலம் முழுதும்
மரிக்காமல்
எதிரொலித்துக் கொண்டேயிருக்கும்.

**-போராட்டம்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## முகத்தை மூடிக்கொள்ளுகிற குழந்தை

இன்று விடுவிக்கப்படாதவர்கள் மற்றொரு பக்கத்தில்
கம்பிகளுக்குள் நிற்கிறார்கள்.
அவர்களின் இடுப்பில் இருந்த குழந்தைகள் அழுகின்றன.
இந்தக் குழந்தை கொண்டாடத் தொடங்கிய
மகிழ்ச்சி முட்கம்பிகளில் மோதி சிதறுகிறது.
தனது அம்மா அப்பாவின்
பெயர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறதா என உறுதி செய்யப்பட்டு
ஒலிபெருக்கியில் அறிவித்துவிட்டு
குழந்தையை ஒலிபெருக்கியில் அவர்கள் புன்னகைக்க விட்டார்கள்.

உன்னை வரவேற்பதற்காக சொற்களை கொண்டு வந்திருக்கிறேன்.
கைளில் கட்டியிருந்த அடையாள இலக்கை
அவிழ்த்து உன்னை வெளியில் அழைத்துச் செல்லுகிறேன்.
குழந்தை முகத்தைப் பொத்திக்கொண்டு புன்னகைத்துக்கொண்டிருக்கிறது.
வெளியைப் பற்றி அது அறிந்திராத கதைகளை கேட்டபடி
உள்ளே அறிந்து வைத்திருந்த கதைகளையும்
தனது மொழியில் சொல்லத் தொடங்குகிறது.
எல்லோரும் கேட்டபொழுதும் யாருக்கும் புரிவதாயில்லை.

முள்ளி வாய்க்காலில் பதுங்குகுழியொன்றில்
ஷெல்களின் இரவில்
பிறந்து மிஞ்சியிருக்கிறவர்களுக்காக
புன்னகையை வளர்த்துக் கொண்டிருக்கிறது.
இராணுவ தளபதியொருவனின் சட்டையில்
தூங்கிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களை இழுத்து பிடுங்க
அவனது தோள்களை எட்டிப் பிடிக்கிறது.
அந்தத் தளபதியும் குழந்தையைப் பார்த்து சிரிக்கிறான்.
குழந்தை முழுப் புன்னகையையும் சட்டென நிறுத்துகிறது.

குழந்தைகள் அழும் சத்திற்கிடையில்
மீளவும் மீளவும் இந்தக் குழந்தையின் புன்னகை எழும்புகிறது.
அவர்க்ள பேசுகிறார்கள் உலகத்தைப் பற்றியும்
வாழ்வைப் பற்றியும்
குழந்தைகளின் விடுதலை பற்றியும்
இன்னும் விமானங்களை வானத்தில் கண்டுகொண்டிருக்கிற குழந்தைகள்
அதிர்வுகளுக்கு அஞ்சி நிலத்தில் விழுகின்றன.

இந்தக் குழந்தை புன்னகைத்தது., மற்றைய குழந்தைகளுக்காகவும்
அவர்களுடைய அம்மா அப்பாக்களுக்காகவும்.
மிகவும் பெரிதாய் புன்னகைத்தது.
புகைப்படங்களுக்கு முகத்தையும் கொடுத்தது.
அவர்கள் சொன்னார்கள் குழந்தையை
எங்கள் உலகத்திலேயே வளர்த்து விடுங்கள் என.
இனி, இந்த நாட்டின் குழந்தை எனவும்
இது பயங்கரவாதத்திற்கு துணைபோயிருந்தது
கண்டு பிடிக்கப்பட்டபோதும்
மன்னிக்கப்பட்டிருக்கிறது எனவும்
இறுதி யுத்திற்கு சில நாட்களின் முன்பாக
பிறந்து ஒரு வாரத்தில் சரணடைந்தபடியால் யுத்தக்குற்றங்களை
மற்றைய எல்லோரைவிடவும்
மிக குறைவாகவே செய்திருக்கிறது எனவும்
சொல்லிக் கொண்டிருந்தார்கள்.
குழந்தை மூச்சை அடக்கி வைத்துக்கொண்டு பார்க்கிறது.

பெயர் பதிவு செய்யப்பட்ட புத்தகத்தில் கடைசியாக
குறித்து வைக்கும்பொழுதும்
வாசலில் வெளியில் அனுமதிக்கப்படும்பொழுதும்

மீளவும் பேருந்தில் ஏறுகிறபொழுதும்
பல கோணங்களில் படம் பிடிக்கப்பட்டது.
செல்லும் முகவரியையும் சுற்றித்திரியும் எல்லைகளைப் பற்றியும்
மீள ஞாபகப்படுத்தப்பட்டது.
கூப்பிடுகிறபோது எப்பொழுதும் குழந்தையை கொண்டு வருவதற்கு
தயாராக இருப்பதாக குழந்தையின் தகப்பன் சொல்லுகிறான்.

குழந்தை கைகளை விலக்கி பார்க்கிறது குருதி காய்ந்த தெருக்களை.
நான் சொல்லத் தொடங்குகிறேன் கொண்டு வந்த சொற்களை.
அதன் புன்னகைக்காக காத்துக்கொண்டிருந்தேன்.
கணவனை தேடி மற்றொரு முகாமிற்கு செல்ல இறங்குகிற
இன்னொரு குழந்தையையும் தாயையும் பார்த்து
முகத்தை மூடிக்கொள்ளுகிறது.
கையை விலக்கிய பொழுது முகம் சிவந்துபோயிருந்தது.
கையில்
அடையாள இலக்கம் கட்டியிருந்த இடத்தில் குருதி கசிந்திருந்தது.
வீட்டின் முன், விறாந்தையில் இருந்தபடி
தனியே குழந்தை மீளவும் புன்னகைத்துக்கொண்டிருந்தது.

**–தீபச்செல்வன்.**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## ஆயுதபூசை!

அதிர்ச்சியாகத்தான்
இருந்தது!
இருக்காதா பின்னே,
பகத்சிங் பிறந்த நாளன்று
அரசு விடுமுறை!

எப்படி சாத்தியம் இது?
அவனென்ன,

காந்தியா?
கதராடை உடுத்தி,
மக்களின்
கோவணம் உருவ!
வெள்ளைக்காரன்,
கால் நக்கி
மெடல் வாங்க!

என்னதான் நடந்தது,
நடந்தபடியே யோசித்த போது
ஞாபகம் வந்தது,
நேற்று
ஆட்டோக்கார "காம்ரேடு"
கடலை பொரி கொடுத்தாரே!
அடடே!
ஆயுத பூசை!

என்ன பொருத்தம்?

தூக்கிய
துப்பாக்கியை மட்டுமல்ல,
தன்
வார்த்தைகளையே தோட்டாக்களாக்கி,
வாரிசுகளிடம்
வழங்கியவனின்
பிறந்தநாளில்
வாழத்துடிக்கிறோம்
வற்றாத,
அவன் நினைவுகளைப் போல!

இன்னும்,
தெரிந்து சிலரும்
தெரியாமல் பலரும்
கொண்டாடுகிறார்கள்
ஆயுத பூசை!

யாருக்கான ஆயுதம்
யாருக்கான பூசை?

சும்மாவே இருந்து,
சோறு தின்று,
தொந்தி வளர்ப்பவனுக்கு
திரிசூலம் ஆயுதமென்றால்,

ஊரையே வெளிச்சமாக்க,
உயிரைப் பணயம் வைத்து
உயரக் கம்பங்களில்
ஏறும் எமக்கு
செருப்புதான் ஆயுதம்!

கண நேரம்
கடந்து செல்லும் முன்
மூக்கைப் பிடிக்கச் செய்யும்
உன்
மலச்சாக்கடையில்,
மூச்சடக்கி,
மூழ்கி எழும் எமக்கு
மலவாளிதான் ஆயுதம்!

உன் நுகர்வு வெறியின்
எச்சங்களால்,
உன் மனதைப் போலவே
குப்பை கூளமாகிப் போன
சாலைகளை
பெருக்கித் தள்ளும்
எமக்கு,
துடைப்பமே ஆயுதம்!

அனைவரும்
இந்து என்றாய்,
செய்யும் தொழிலே
தெய்வம் என்றாய்,

சேர்த்து வைத்துக்
கொண்டாடு பார்க்கலாம்,
உன் நவராத்திரிக் கொலுவில்,
செருப்பையும்,
மலவாளியையும்,

துடைப்பத்தையும்,
திரிசூலத்தின்
மூன்று முனைகளாய்
நினைத்து!

**– விடிவெள்ளி**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## துப்பாக்கியின் தெரு

என்னிடம்
சிறிய
நீலவானமொன்று இருந்தது.
ஆக்கிரமிப்பாளர்கள்
அதை என் மீது விழுத்தினர்.

சிறிய
இருண்டநிறக் குருதியாறு ஒன்றும்
தேன்கனவுப் பொதியொன்றும்
என்னிடமிருந்தன.
அவர்கள்
அதையெல்லாம்
கொள்ளையடித்தனர்.

ஆயினும்
அவர்கள் என் தோலை மாற்றி
என் முகத்தைச்
சிதைக்க வந்தபோது
நான்
வெண்பனியும்
இடியொலியும் பூண்டு
என் தாயகத்தைத்
தோளிற் சுமந்துள்

துப்பாக்கியின் தெருவில்
இறங்கினேன்.

**–றபீக் ஸபி**

*☆துருக்கிய குர்திஸ்தான் கவிஞர்*

*ஈழத்து எழுத்தாளர் சி.சிவசேகரம் ஆங்கில வழி தமிழில் மொழிபெயர்த்திருக்கும் இக்கவிதை அவரது "போரின் முகங்கள்" கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது. புதிய கலாச்சாரம், ஜனவரி'2002*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## தலைமுறை

அப்பாவின் செய்கைகளை
நினைக்கையில் இன்றைக்கும்
பிரமிப்பாக இருக்கும்ஞ்

காரைவீட்டு அய்யாவின்
வயலுக்கு உரத்தைப் போட்டுவிட்டு,
எஞ்சிய சாக்குகளை
எங்களுக்கு விரிப்புகளாக்கும்
அவரின் லாவகம்.

"தினமும் வயலில்தான்
வேலை செய்கிறாய்,
பிறகேனப்பாஞ்
நம் வீட்டில் மட்டும்
நாள் முழுக்கச் சோளக் கஞ்சி?"
என்று எப்போதாவது
கேட்கத் தோணும்
நடுச்சாமம் வீட்டுக்கு வரும்
அப்பாவின் முகம் பார்க்க
பாவமாய் இருக்கும்.

பிடித்ததைக் கேட்டு
அழுது, அழுது நான்
தூங்கிப்போனாலும்,
டவுசரும், பனியனும்
எப்படியாவது
வாங்கி வைத்துவிடுவார்
விடிவதற்குள்.

காலையில் நான் எழுவதற்குள்
அந்தப் புதிய ஜவுளிக்கடைப் பையில்
தூங்கிக் கிடக்கும்
என் உடைந்துபோன சிலேட்டும்
அட்டைபோன புத்தகங்களும்.

புதுடவுசரும், பனியனும்
என் விழிப்பிற்காக,
தலையருகே காத்திருக்கும்.

விறகுகளை வெட்டி முடித்த
அதேநேரத்தில்
பம்பரம் செதுக்கி
என் உள்ளங்கையில்
சுற்ற விடுவார்.
கண்ணருகே கையைக்
கொண்டு வந்து,
பம்பரத்தையே பார்த்து நிற்பேன்.
அதுவும் என் உள்ளங்கையில்
கம்பீரமாய்ச் சுற்றிக் கொண்டிருக்கும்.

எங்கப்பாவைத் தவிர
எங்கள் மாடுகள் யாரையும் முட்டும்,
அதன் கூரிய கொம்பொன்றில்
எந்தப் பயமும் இன்றி
அமர்ந்திருக்கும் ஒரு
வண்ணத்துப் பூச்சி.

அப்பாவுடன்
மழைநாட்கள்
மறக்க முடியாதவை

தூங்குமிடங்கள் ஈரமில்லாமல் இருக்க
வீடு முதுவதும்
அலுமினியத் தட்டுக்களைக்
கவசங்கள் போல்
ஆங்காங்கே வைப்பார்,
மழைத்துளிகள் பட்டுத் தெறிக்கும்
அந்தச் சத்தத்தில்தான்
எங்களின் இரவுத் தூக்கம்
ஆரம்பமாகும்.
அப்பா மட்டும் ஏனோ தூங்காமல் விட்டத்தையே
பார்த்துக் கொண்டிருப்பார்.

போன வருசச் சாமி கும்பிடுக்கு
எடுத்த டவுசர்தான், இருப்பினும்
பின்பக்கம் கிழிந்து போனது.
"இன்" செய்யச் சொன்னால்தான்
மானம் போய்விடும்.
கிழிந்திருக்கும் இடத்தில்
கைகளை நுழைத்துக்
"கடுதாசி" போடுவார்கள்
பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்.

அப்போது அப்பாவை
நினைத்து
அழுதிருக்கிறேன்.

ஆனால்
காரவீட்டு அய்யாவின் முன்,
அப்பா குனிந்து நின்றால் மட்டும்
எனக்கு கோபமாய் இருக்கும்.

**-முகிலன், புதிய கலாச்சாரம், அக்டோபர்' 2002**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## மூன்றாவது வழிபாட்டுப் பாடல்

எனது சொற்கள்
மண்ணாய் மணத்த நாளில்
கோதுமைத் தாள்களின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
கொதித்துச் சீறிய நாளில்
இரும்புத் தளைகளின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
கற்களாய் உறைந்த நாளில்
தழுவிச் செல்லும் ஓடையின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
கலகமாய்க் கிளர்ந்த நாளில்
நடுங்கும் நிலத்தின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
புளித்த ஆப்பிளாய் சுருங்கிய நாளில்
நம்பிக்கை தளரா உள்ளங்களின்
நண்பனாயிருந்தேன்.

ஆனால்
சொற்கள் தேனாய்ச் சுரந்த தருணத்திலஂ.
ஈக்கள் மொய்த்தன
என் உதடுகளில்!

**-மஹ்மூத் தார்வீஷ்**
*(ஆங்கிலம் வழி தமிழில்: புதூர் இராசவேல்)*

*மஹ்மூத் தார்வீஷ் பாலஸ்தீனப் போராளி. இழந்த தாய்நாட்டை மீட்கப் போராடி வரும் எல்லா பாலஸ்தீன மக்களும் நேசித்த கவிஞரும் கூட. 1948இல் இசுரேல் அரசு தார்வீஷின் கிராமத்தைச் சூறையாடி முற்றிலுமாக அழித்தபோது,*

*அவரது குடும்பம் லெபனானுக்குச் சென்றது. விடுதலைத் தாகம் கொண்ட இளம் போராளியாக தனது இருபதாம் வயதுகளிலேயே இசுரேல் கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்து பணியாற்றினார். 1970இல் ரசியா சென்று படித்தார்; பிறகு பெய்ரூட்டிலும், பாரீசிலுமாக சுமார் 26 ஆண்டுகள் புலம் பெயர்ந்து வாழ்ந்தார். 1996இல் இசுரேல் திரும்பி, கொந்தளிப்பான 'மேற்கு கரையில்' உள்ள ரமல்லாவில் தங்கினார்.*

*கவிதை, உரைநடைப் படைப்புக்களில் 30 தொகுதிகளை வெளியிட்டுள்ள அவர், கலை மக்களுக்கானது என்பதில் தெளிவான பார்வை கொண்டவர். தார்விஷ் பாலஸ்தீன மக்களின் உயிர்மூச்சு; தாயகம் பிடுங்கப்பட்டவர், நீக்கப்பட்டவர். தாயகம் ஏக்கம் கொண்டவர்களின் கம்பீரமான போராட்ட சாட்சி.*

*கடந்த ஆகஸ்டு 9, 2008 அன்று அவரது 66ஆவது வயதில் இதயநோய்ச் சிகிச்சையின் போது இறந்து போனார். பாலஸ்தீனத் தாயகத்தின் போராளியாகவும், புலம் பெயர்ந்தோரின் உரிமைக் குரலாகவும், கம்யூனிச உணர்வுமிக்க சர்வதேசவாதியாகவும் வாழ்ந்த கவிஞர் மஹ்மூத் தார்விஷ்.*

*-புதிய கலாச்சாரம், அக்டோபர்' 2008*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## குழந்தைகள் அழுதுகொண்டே இருக்கிறார்கள்!

இப்படித்தான் கொடுமையான இரவுகளையே
எப்பொழுதும் உனக்கு தரவேண்டியதாயிற்று.
காலை என்றாலும் உன்னை
நெருங்கிவிட முடியவில்லை.
எல்லாவற்றையும் நிர்பந்தங்களுக்காக
செய்துகொண்டிருக்கிறோம்.
உன்னை தனியே விட்டுச் செல்லுகிற
என் தாய்மையைப் பற்றி
என்ன சொல்லி அழுகிறாய்!
அந்த வெளியில்
கலந்து கிடக்கிற தாலாட்டுகள்
உன்னை தூங்க வைக்கும் என்றே நினைத்திருந்தேன்.

அவர்கள் உன்னை என்னிடமே சேர்ப்பதாக
சொல்லுகிறார்கள்.
வீடுகளை பார்த்து ஆசைப்பட்டுக்கொண்டு வந்த
பயணத்தின் இடையில்
ஒரு தோழிக்கு குழந்தை பிறந்திருக்கிறது.
அதற்கான பாதுகாப்பு விசாரணைகளுக்காகத்தான்
இடையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறோம்.
தூங்க மறுத்து
அழுது களைத்துப்போய் காலையில்
சூரியனை காணாது தூங்கிக்கொண்டிருக்கிறாய்.
நினைத்தபடி எங்கும் செல்ல முடியாது
என்பதால் உன்னை கொஞ்சம் பொறுக்கச்சொல்லுகிறேன்.

எனது கண்களும் கரைந்து கொண்டிருக்கின்றன.
என்னை மறந்து
தூங்கும்பொழுது மீளவும் உன்னிடம் வந்து
என்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ள
துர்பாக்கியத்தில் நானிருக்கிறேன்.
இங்கு தோள்களில் பிள்ளைகளை அவர்கள் போட்டுக்கொண்டுதான்
புத்தகங்களை கொண்டு வந்திருக்கிறார்கள்.
கூடவே தங்கள் துணைகளையும் அழைத்து வந்திருக்கிறார்கள்.
ஏன் நம்மை பிரித்து விட்டார்கள்.
இந்த இரவு மிகவும் கொடுமையாக
நீண்டுகொண்டே உன்னை தூரமாக்கிச் செல்லுகிறது.

நானும் உன்னைப்போலவே தூங்க மறுத்துக்கிடக்கிறேன்.
பால் சுறந்து வடிந்துகொண்டிருக்கிறது
மனம் கொதித்து அறைக்குள் அலைந்துகொண்டிருக்கிறேன்.
மகளே இப்படித்தான்
நாங்கள் எப்பொழுதும் பிரிக்கப்படுகிறோம்.
எப்படி நீ அருகில் இருக்கிறாய் என்றும்
நான் உன் அருகில் இருக்கிறேன் என்றும்
சொற்களால் சமாளிக்க முடியும்?
நான் வெகு தூரத்திற்கு வந்திருக்கிறேன்.

எங்கோ ஒரு கூடாரத்தில் அழுது படிந்து கிடக்கிற
உனது முகத்தை யார்தான் காட்டமுடியும்?
பல்வேறு விடயங்களுக்காக

குழந்தைகள் அழுதுகொண்டே இருக்கிறார்கள்.
நாளையும் விரைவாக வருகிறது.
எப்படி மீளவும் உனக்கு பதில் அனுப்பப்போகிறேன்.
அவர்கள் உன்னை கொண்டு வந்து தருவதாகவே சொல்லுகிறார்கள்.
நான் சொன்னபடி
நிறையவே பொறுத்து உனக்கு தொண்டையடைத்துப்போயிருக்கிறது.
அவர்கள் சொல்லுவதைத்தானே சொல்ல முடியும்!

இவை கொடுமையான இரவு என்பதை
நான் சொல்லாமலே அறிந்து வைத்திருப்பாய்.
உனது அழுகை மிகச் சமீபமாகவே கேட்கிறது.
இன்னும் உன்னை பொறுத்துக்கொள்ளச் சொல்லுவது
எவ்வளவு இரக்கமற்ற வார்த்தைகளாக இருக்கும்!
உன்னை தூங்க வைத்து
அசைத்துகொண்டிருக்கும் மடிகளால் நிறைந்து கிடக்கிறது

என் கனவு .
எல்லாக் குழந்தைகளும்
ஏதோ ஒன்றின் நிமித்தம் அழுதுகொண்டேயிருக்கிறார்கள்.

**–தீபச்செல்வன்**

*(03.09.2009 தடுப்பு முகாமில் தனது குழந்தையை கணவருடன் விட்டுவர நேர்ந்த யாழ்ப்பாணபல்கலைக்கழக மாணவி தனது குழந்தை தன்னைப் பிரிந்து சுகவீனமடைந்து,அழுதுகொண்டிருப்பதால் குழந்தையை தன்னிடம் சேர்த்து விடும்படி கோருகிறார்)*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## ரணமாகும் கணங்கள்

கல்லூரிப் பாலைவனத்தில்
கற்பகத் தருக்களைத்
தேடியலையும்

கலாமின் கனவு வாரிசுகள்
நாங்கள்

எங்களின் புனித வரலாறு
வெளியாகும் போதெல்லாம்
“கூவம்” கூட
முகம் சுளிக்கும்

முடிந்தால்
மூக்கைப் பொத்தியவாறே
கேளுங்கள் நீங்களும்!

எங்களின்
அலாரச்சத்தத்தில்
எல்லோரும் எழுந்த பின்பே
எட்டுமணி சுமாருக்கு,
எட்டிப் பார்ப்போம்,
போர்வைக்குள்ளிருந்து!

மிருகங்களைக்
காரணம் காட்டி
மிச்சம் செய்வோம்,
பேஸ்ட்டையும் சோப்பையும்!

முகம் கழுவி,
தலை கலைத்து
அப்பாவிடம் திட்டுவாங்கி
புறப்படுவோம் கல்லூரிக்கு!

ஜீவ நதியில்
ஓடைகள் கலப்பது போல
வரும் வழியில்
தறுதலையில் ஒன்று சேரும்!

தடுமாறி வரும்
மாநகரப் பேருந்துகளில்,
தாண்டவமாடி
தாவணியிழுத்து
தந்திரமாய் பார்வைகள் வீசி

பார்வையாலே
செருப்படி வாங்கி
பத்திரமாய்
மனதில் சேகரிப்போம்!

முதல் நாளிலிருந்தே
பழகிவிட்டதால்
மூன்றாம் மணி நேரம்தான்
நுழைவோம் வகுப்பில்!

வந்த வேகத்தில்
வருகைப் பதிவு
நடத்திவிட்டு,
வெளிநடப்புகளும்
நிகழ்த்துவோம்!

மொட்டை மரத்தடியில்
வெட்டி அரட்டையில் தொடங்கி
வெட்டு குத்துகளில் முடியும்!
வார்த்தைகள் முற்றி
கைகள் அரிக்கும் போது
அங்கங்கே
அரிவாள்கள் முளைக்கும்!

மைதானங்கள்
போர்க்களமாகும்
தருணங்களில்
ரணகளமாகும்
எம் பெற்றோர் மனங்கள்!

அவ்வப்போது
பெருமையைக் கட்டிக்காக்க
கட்டாய ஸ்டிரைக்குகள்
அவசியமாகும் போது!

காவலர்கள் நாய்களாவார்கள்
கையில் கல்லிருக்கும் வரை
நாங்கள் குரைப்போம்,

பதிலுக்குக் கடித்தால்
பதறி சிதறுவோம்!

உயிரையும் கொடுப்பதாய்க்
கூறிக்கொண்டே
ஒவ்வொருத்தியையும்
ஓரங்கட்டும்
எங்கள்
காதலின் புனிதத்தை
கடற்கரை மணலும்
கைப்பேசிகளும் அறியும்!

தேர்வுகள் எல்லாம்
தேள்களைப் போலவே தெரியும்!
அவற்றின் நஞ்சைவிடவும்
கொடியவை
"அரியர்கள்"

மூன்று வருட முடிவில்
எங்களின் கல்லூரி வாழ்வு
முடிவிற்கு வரும்போது
அரியர்கள்
மலைகளாய் மாறி
மலைக்க வைக்கும்!

கவலையில் மயங்கிக்
கண் விழிக்கும் போது
காலில் இடறும்
கவர்மெண்ட் பாட்டில்கள்!

தினந்தோறும்,
எங்களின் புனிதயாத்திரைகள் யாவும்
"டாஸ்மாக்"
நோக்கியே நிகழும்.

சொர்க்கத்திலிருந்து
தூக்கியெறியப்பட்டவர்களாய்,
கல்லூரியை முடித்தவுடன்
கண்கள் கலங்கும்

பிரிந்து போன
நண்பர்களுக்காக அல்ல

பிடரியை பிடிக்கும்
பிரச்சினைகளுக்காக!

இப்போதுதான்
வந்து தொலைக்கும்
எம் மூத்தோரின்
நினைவுகள்!

எத்தனையோ முறை
எகத்தாளமாய்
எக்காளமிட்டோம்
அவர்களைப் பார்த்து!

வீடு வீடாய்
ஏறியிறங்கி
எச்சிலை நாய்போல
துரத்தியடிக்கப்படும்
மார்க்கெட்டிங் வேலையும்
பாதி வயிற்றை நிரப்பும்
பகுதி நேர வேலையுமாய்
காலச்சக்கரத்தை உருட்ட
அவர்கள் படும் கஷ்டமெல்லாம்
கண்ணெதிரே தோன்றும் போது
கண்ணை மூடிக்கொண்ட
கடவுளும்
கவர்மெண்டும்
எங்களின் விரோதியானார்கள்
எத்தனையோ பேர்
எதிர்த்துப் போராடினர்
பிரச்சினைகளின் ஆணிவேரை
பிடுங்கியெறிய!

எள்ளி நகையாடினோம்
எல்லாம் இழந்தபிறகு
ஏங்குகிறோம்

எவனாவது வரமாட்டானா?
பகல்நேர சூரியனாய்!
பகத்சிங்கின் பேரனாய்!!

**-விடிவெள்ளி**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## காலனிச் சத்தங்கள்

என் செல்ல மகளே!
நீ பிறந்ததில் எனக்கு
மிக்க மகிழ்ச்சி.

உன் தாத்தாவிற்குத்தான்
என் மீது கொஞ்சம் வருத்தம்.
குலசாமி பெயர் விடுத்து,
மரித்தவர்களின் ஊர்ப்பெயரை
உனக்கு சூட்டியதற்காகஞ்
முடிந்தவரை விளக்கிவிட்டு
பிடிவாதமாய்,
வெண்மணி என்றே உனக்கு
பெயரிட்டு விட்டேன்.
என்னைப் பொறுத்தவரை அவர்கள்
மரிக்கவில்லை.

நகரவாழ்வின் விழுமியங்களோடு
சங்கமித்து நிறைய வருடங்கள்
உருண்டோடிவிட்டன.
அதன் தொடர்ச்சியாய் ஞ இப்பொழுது
நீயும் வந்துவிட்டாய்ஞ்

கடந்துவந்த தூரங்களின்
நீளத்தை என்றாவது ஒருநாள்- நீ
கேட்டறிய வேண்டும் என்பதே
என் ஆவல்.

ஏனெனில்,
தழும்புகளற்ற காயங்கள்
என்னிடம் நிறைய உண்டு.
அதை உன்னோடு பகிர்ந்து கொள்ளும் போது
உனக்குள் ஒரு பண்புமாற்றம்
நிகழலாம் என்பது என் நம்பிக்கை.

முரண்களின் மூட்டையாக
இருக்கும் இந்த சமூக அமைப்பின்
சிக்கல்களை
அறுத்தெறிவதற்கான ஆயுதமாகஞ்
அந்த நம்பிக்கை
உனக்குள்ளும் ஊடுருவலாம்.

அழகிய ஓவிய வேலைப்பாடுகளடங்கிய
பீங்கான் குவளைகளில்,
நீயும் நானும்- இப்பொழுது
தேநீர் அருந்திகொண்டிருக்கிறோம்,
இவை நாம் எட்டிய
குறைந்தபட்ச வாழ்க்கை.

இது நடந்தது கூட
உடனடி நிகழ்வல்ல,
ஒரு நெடிய போராட்டத்தின்
விளைவு.

பனை மரத்து ஓலைகள்,
சொட்டைகள்,
அலுமினிய கிண்ணங்கள்ஞ்
இவைகள்தான்
உனது முன்னோர்களின்
தேநீர் குவளைகள்

அதாவது,
'நாகரிக' சமூகத்தை
தலைகுனியச் செய்திடும்
இருண்ட கணங்கள்.

"மனிதர்களை 'மனிதர்'
நாயினும் கேவலமாய்
நடத்த முடியுமா அப்பா?"
என்று நீ கேட்கலாம்.

ஆம்,
இப்பொழுதும் இந்த வன்கொடுமைகள்
தொடர்கிறது.
புதிய வடிவங்களில்.
நீ எதிர்கொள்ளும்போது
இன்னும் நவீனப்பட்டிருக்கலாம்.

ஆனாலும்,
உன் கல்விக்கூடத்தில்
'தீண்டாமை ஒரு பாவச்செயல்,
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்,
...................................' என்று,
நாடே புனித திருவுருவாய்
இருப்பதுபோல்
வெற்று வார்த்தைகளை
உன்னுள் இட்டு நிரப்புவார்கள்

அப்பொழுது
உண்மையையும், பொய்யையும்,
உரசி பார்த்துக்கொள்ள
நம் பகிர்தல் உனக்கு பயன்படலாம்.

என் செல்ல மகளே!
நீ நடைபயில கற்றுக்கொண்ட
தருணங்கள் - உண்மையில்
அழகானவை, அற்புதமானவை.

எல்லா அப்பாக்களையும் போல்
அந்நிமிடங்களை மிகுந்த
ரசனையோடு விழுங்கியுள்ளேன்.

இருக்கட்டும்.
கடைவீதிக்கு சென்ற போதுதான்

உன் அம்மாவின் செல்ல கத்தல்
ஞாபகத்திற்கு வந்தது.

“குழந்தை இருக்கும் வீட்டில்
பொம்மைகளைவிட –
புத்தகங்கள்தான் அதிகமாய் உள்ளது,
அவள் எவற்றோடுதான் விளையாடுவாள்?”

உனக்கான பொம்மைகள்
விளையாட்டு பொருட்கள்,
நிறைய வண்ணங்கள்
கொஞ்சம் தூரிகைகள்.

எல்லாம் வாங்கிவிட்டேன்
குறிப்பாக,
நீ விரும்பி கேட்ட
அழுத்தி நடந்தால்
இசை எழுப்பக்கூடிய காலணிகளையும்
கவனமாய் வாங்கிக் கொண்டேன்.

அடுத்த வாரம்
அநேகமாய் நாம் ஊருக்கு
செல்ல நேரிடும்.

அப்பொழுது மேலத்தெரு வழியாகத்தான்
தாத்தா வீட்டிற்கு செல்வோம்.

அந்த வழியாக,
உன் கொல்லுத் தாத்தா,
தாத்தாங், ஏன் நானும் கூட
செருப்பை கையில் தூக்கியபடிதான்
கடந்து சென்றுள்ளோம்

ஆனால்,
நீ என்னோடு வரும்போழுது,
உன் பிஞ்சுப் பாதங்களால்
மேலத்தெருவில் அழுத்தமாய்
பாதம் பதித்து நடக்க வேண்டும்.

உன் காலணிகளின் அடியிலிருந்து எழும் இசை
அந்தத் தெருவில் குடிகொண்டிருக்கும்
ஜாதியத்தின் செவிகளை
துளைத்தெடுக்க வேண்டும்.

செய்வாயா என் செல்ல மகளே!

நீ நடைபயில கற்றுக்கொண்ட
தருணங்களை விட,
அப்போதைய நிமிடங்கள் இன்னும்
அழகானதாய், அற்புதமானதாய் இருக்கும்.

**- முகிலன்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## அரசனின் நகரம் மாளிகை மற்றும் கடற்கரை

அரசனின் நகரம் இரவு முழுவதும் சிரித்துக்கொண்டிருக்கிறது.
நண்பனே, உரையாடலின் பின்னர்
கடற்கரையில் வெகு நேரமாய் காத்திருந்தேன்.
அங்கிருந்து அகற்றப்பட்டு
தங்கியிருந்த வாடி வீட்டிற்கு முன்னால் கடற்கரையுடன்
முடிந்தவற்றை உனக்கு சொல்லியனுப்பிக்கொண்டிருக்கிறேன்.
நான் இனி என்ன செய்வது
என்பதை உன்னால் கூற முடியுமா?

கடற்கரை எதையோ செல்லிக்கொண்டிருக்கிறது.
அதிகாரத்தின் பெருஞ்சிரிப்பு கடலை கடந்து
எல்லாத் திசைகளுக்கும் சென்று கொண்டிருக்கிறது.
கடல் மகிழ்ச்சியடையவில்லை.
அது எல்லாப் பக்கங்களுக்கும் அலையை தள்ளி
எதையோ பேசிக்கொண்டிருந்தது.
விண்ணப்பங்கள் நிரம்பிய எல்லாக் கடிதங்களையும்
கடல்தான் முழுமையாக வாசித்துக்கொண்டிருந்தது.

கொண்டு சொல்லப்பட்ட நிருபங்கள்
மிதித்தெறியப்பட்டதை எப்படி? வெளிக்கொணர முடியும்?
நாம் அவமானப்பட்டதை யாரிடம் பகிர முடியும்?
அதிகாரம் நாளுக்கு நாள் தீனியிட்டு
வளர்க்கப்படும் அந்த மாளிகை
எங்களை சிறிய தகரப்பேணியில் அடைத்துக்கொண்டிருக்கிறது.
காய்ந்துவிடாத எங்கள் குருதியை எங்கும் அப்பி வைத்திருக்கிறது.
அரசன் எப்பொழுதும் சிரித்துக்கொண்டேயிருக்கிறான்.

அரசனின் பெரு மகிழ்ச்சியால் மாளிகை
எப்பொழுதும் அதிர்ந்துகொண்டேயிருக்கிறது.
கனவுகள் கிழித்து மறுபுறத்தில் உள்ள தெருவில் காட்சிக்கு
வைக்கப்பட்டிருக்கும்
கடற்கரையிலிருந்து என்னதான் சொல்ல முடியும்?
திரும்பும் பக்கங்கள் எல்லாம் தோற்கடிக்கப்பட்ட
எமது மண்மேடுகளது புகைப்படங்களின் மீதிருந்து
அரசன் சிரித்துக்கொண்டிருக்கிறான்.
அவர்களது நகரம் வெற்றியை இன்னும் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.
நமது வாழ்வை தின்று ஒளிர்ந்துகொண்டிருக்கிறது.

அரசனின் அன்றைய வார்த்தைகள் எவ்வளவு குரூரமானவை என்பதை
உனக்கு உணர்த்த வேண்டியுள்ளது.
எனினும் அவற்றை மீளவும்
என்னால் உச்சரிக்க முடியவில்லை.
முகம் இறுகி நாங்கள் வார்த்தைகளற்று தவித்தோம்.
நாங்கள் அரசனுக்காக சிரித்து
கைகளை தட்ட வேண்டும் என்று மந்திரி சொன்னான்.
முடியுமானவரை சிலர் அரசனை மகிழ்ச்சிப் படுத்தினார்கள்.

எல்லோரும் கடற்கரையை பார்த்து புன்னகையையும் கைகளையும்
இழந்ததாக சொல்லிக்கொண்டு நின்றனர்.
அரசன் தனது வீட்டுக்குச் சென்று உணவருந்திய பின்னர்தான்
நாம் வாடி வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டோம்.
எல்லாவற்றின் பிறகும், சில நாட்கள் கழிந்தும்
உன்னுடன் எதையும் பகிர முடியவில்லை.
நாம் தொடர்ந்து ஏமாந்துகொண்டிருக்கிறோம்.
நமது தேசம் போலன்றி இங்கு இரவுகள் முழுமையாக கிடைக்கின்றன.

இரவிரவாக எல்லாரது
புன்னகையும் கைகளும் கடல் வழியாக எங்கோ எடுத்துச் செல்லப்பட்டன.
அரசனின் நகரமும் இரவிரவாக சிரித்துக்கொண்டிருக்கிறது.
நன் கடற்கரையில் இருந்து முழு இரவையும் கடந்து கொண்டிருந்தேன்.

*(12.10.2009 இலங்கை ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ, சந்திப்பு, கொழும்பு, பழைய பாராள மன்ற கட்டிடம், கடற்கரை)*

**–தீபச்செல்வன்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## கடவுளரின் நகரங்களில் வாழுதல்

எல்லாப்பாதைகளும் திருப்பங்களில் முடிகின்றன
ஒப்பாரிகளும் விசும்பல்களும்
ஓலங்களினாலுமான நகரத்தில்
வெறும் பிரார்த்தனைகளுடன் வாழுகின்றோம்

எல்லாப் பிரார்த்தனைகளும் கடவுளருக்கானதில்லை
எல்லாக் கடவுளர்களும் சனங்களுக்கானவையுமல்ல
இருந்தபோதும்
பிரார்த்தனைகளால் நிறைகிறது நகரம்
கடவுளர்கள்
மகா காலங்களினது அற்பத்தனங்களிலிருந்து
வந்துவிடுகின்றனர் நகரங்களுக்கு

மதுவருந்தி போதையில் மிதக்கும் கடவுள்கள்
கொலைகளின் சாகசங்களைப் பேசும் கடவுள்கள்
சித்திரைவதைக் கூடங்களில்
குதவழி முட்கம்பி சொருகும் கடவுள்கள்
தெருக்களில்
உடை களைந்து வெடிகுண்டு தேடும் கடவுள்கள்

அடையாள அட்டைகளைத் தொலைத்தவனின் மனமும்
மறந்து போய் வீட்டில் விட்டு வந்தவனின் மனமும்
தெருக்களில் கதறுகின்றன

கடவுளரின் அற்பத்தனங்களுக்கிடையில்
வெறும் பிரார்த்தனைகளுடன் இரவுகளை உறங்குகிறோம்
பகல்களை ஒட்டுகிறோம்

கடவுளர் அலையும் காலத்தில்
இரவில் புணர்ச்சிக்கலையும் நாய்களினது
காலடி ஓசைகளும் கடவுளர்களுடையவைதான்

ஒப்பாரிகளும் விசும்பல்களும்
ஓலங்களினாலுமான நகரத்தில்
சனங்களின் பிரார்த்தனை
தெருவில் சுடப்பட்டு இறந்தவனின்
இறுதி மன்றாடலாயும் கதறலாயும்
நிர்க்கதியாய் அலைகிறது

**–சித்தாந்தன்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## தோழர் நல்லு

இந்த தோட்டம் எப்போது உருவானதென்று
இந்நாள் வரை
எவராலும் அறிய முடியவில்லை.
எத்தனை மரங்கள்
எத்தனை செடிகள்
எத்தனை வகைகள்
காலத்தின் இடையறாப் பயணத்தில்
உயிர்த்தும் உழைத்தும்
உலர்ந்தும் உருக்குலைந்தும்
தொடர்ச்சியாய்
உயிர் வாழ்க்கை தொடர்கிறது.

☆ ☆ ☆ ☆ ☆

சில காலம் முன்பு
தோட்டத்தினோர் மூலையில்
ஆலமரமொன்று எழுந்து நிற்கக் கண்டேன்.
விந்தையொன்று அதனில் உண்டு.
பொதுவில் மாறுபட்டு
தகிக்கும் சிவப்பு நிறத்தில் அது நிற்கக் கண்டு
அதனை சிலாகிப்பது இயல்பாயிற்று.

அவ்வப்போது வீசும் காற்றில்
அம்மரத்தின்
இலைகளும், கிளைகளும்
தாங்கி நிற்கும் விழுதுகளும்
எழுப்பும் பேரிரைச்சலில்
காற்று பயந்தோடும்.
நிலம் மெல்ல நடுங்கத் தொடங்கும்.
மற்ற மரங்கள் செய்வதறியாது
தலைகுனியும்.
தோட்டக்காரர் சுற்றி நின்று விழிப்பார்.

ஆச்சரியம் மெல்ல வளர
தொலைவில் நின்றே நோக்கி வந்தவன்
அந்த ஆலமரத்தின்
அருகில் செல்லலானேன்.
இது என்ன விந்தைஞ்..
மரம் பேசலாயிற்று.

“வேடிக்கை பார்க்க வந்தாயோ”
என்று வினவியது.
பிரமித்துப் போயிருந்த நான்
ஆமென்று தலையசைத்தேன்.
மெல்லச் செருமிய மரம்
மீண்டும் பேசியது.

“நண்பனே, நீயறியாதவொரு
விடயம் சொல்வேன் கேள்.
நன்றாக எம்மை உற்றுப் பார்.

மரத்தின் உருவில் மறைந்திருக்கும்
மனித உருவங்களைப் பார்" என்றது.

ஆர்வம் மேலிட
அருகில் சென்று உற்று நோக்கினேன்.
உண்மைதான்
அந்த மரம் முழுதும்..
இலைகளும், கிளைகளும்
விழுதுகளும்.. மனிதத் தலைகளே.
இடையறாது நச்சுக்காற்றை உள்ளிழுத்து
அதன் நரம்பொடித்து
உயிர்க் காற்றை உலகுக்கு
அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.
இங்கே பல மரங்கள் செய்யத் தவறியதை
பலகாலமாய் சலிப்பின்றி
செய்து கொண்டிருந்தார்கள்.

எனை கூர்ந்து நோக்கிய மரம்
"ஏன் தயங்குகிறாய்?
வா, நீயும் எங்களோடு
இணைந்து
உயர் வாழ்வுக்காய் உழைக்கத் துவங்கு" என்றது.
பரவசத்தில் பற்றிக் கொண்டு
மரத்தினுள் சென்று
மெல்ல உழைக்கத் துவங்கினேன்.

பிறகுதான் தெரிந்தது,
இடையறாது உழைப்பது
எதற்கும் சுணங்காமல் உழைப்பது
வீசும் புயல் காற்றையும்
சுற்றி வளைக்கும் சுழல் காற்றையும்
தாண்டி உழைப்பது
சிரமமாய்த் தோன்றியது.

இப்படியொரு சிந்தனையின் ஊடான
நாளில் தான்..
கிளையிலோர் அணுவாய்
நான் கலந்திருந்த நேரத்தில்

மரத்தின் அடியிலோர் சத்தமஂ்
மரம் மெல்லக் குனிந்தது.
வருத்தம் தொனிக்க விளம்பியது.

" நல்லு என்றொரு வேர்
நம்மை விட்டு பிரிந்தது" என்றது.

நல்ல வேராய்த்தான் இருந்திருக்க வேண்டும்.
மரத்தின் மவுனம்
அத்துணை கனமாயிருந்தது.
நான் அந்த வேரை
இதுவரை பார்த்ததில்லை
அதன் குரலை கேட்டதில்லை.
அதனோடு பேசியதில்லை.
ஆனால்
ஆனால்

அதனை பார்த்திருக்கிறேனென்றுதான்
சொல்ல வேண்டும்.
குரலை கேட்டிருக்கிறேனென்றுதான்
சொல்ல வேண்டும்.
பார்வையில் படாமல்
மண்ணில் மறைந்திருந்தாலும்
அமைதியாய் இத்தனை காலம்
அந்த நல்ல வேரும் உழைத்ததால்தானே மரத்தின்
ஒட்டுமொத்தமாய் ஒலிக்கும் குரல்
ஒருங்கிணைந்ததாய் தெரியும் உருவம்
உருவானது.

எனவே அறியவில்லை என்று
சொல்வது மேம்போக்கானது.
அறிவேன் என்று சொல்வதே
அர்த்தமுடையது.

மரம் என்னிடம் மெல்லக் கேட்டது.

" நண்பனே,
மின்னும் இலைகளாய்
விரியும் கிளைகளாய்

தாங்கும் விழுதுகளாய்
இருக்க எவர்தான் விரும்ப மாட்டார்ஞ்
ஆனால்,
மண்ணிற்குள் மறைந்து
இத்தனைக் காலம்
அத்துணை இறுக்கத்தில்
இடையறாதுழைத்த
அவ்வேரின் உறுதியை
மாண்பை நான் எங்ஙனம்
விளக்கிச் சொல்வேன்?

நினைத்துப் பார்க்கிறாயா
ஒவ்வொரு நொடியும்
இயங்கும் காற்றைப் போல்
அமைதியாக
முகவரிக்கான எத்தனிப்பின்றி
இயங்குகிறார்களே..
அதை
எங்கனம்
எடுத்தியம்புவேன்?

இவ்வேளையில்
வேறு சில விடயங்கள்
சொல்வேன் கேள்!

என்னிடம் ஒட்டிக்கொண்டிருப்பதால்
மட்டும் பயனில்லை.
அதனையே ஒரு சாதனையாக
எண்ணி மகிழ்கிறாய்.
பசையைக் கண்டால்
பதறிப் போகிறாய்.
சுவரொட்டி என்றாலே
சுணக்கம் வருகிறது.
சுவரெழுத்து என்றால்
தலை கிறுகிறுக்கிறது.
அவசர வேலை
திடீரென முளைக்கிறது.

பிரிந்த வேரின்
பின்னணியில் ஒரு கேள்வி உண்டு.
வெறுமனே புகழ்வதால்
புகழ்ந்துவிட்டு கலைவதால்
என்ன பயன்?
நீ என்று வேராகப் போகிறாய்?
என்று உன்
சஞ்சலங்களை சாம்பலாக்கப் போகிறாய்?
என்று உன்
தயக்கங்களை தூக்கியெறியப்போகிறாய்?
என்று உழைக்கச்
சுணங்குவதில் வெட்கமுறப் போகிறாய்?
என்றுதான் உழைப்பதில்
இடையறாது உழைப்பதில்
உள்ளம் மகிழப் போகிறாய்?
முடிவாய்,

என்று நீ நல்லுவாகப் போகிறாய்?"

கேள்விகள் எதிரொலித்தபடி இருந்தன.
அனல் காற்று வீசிக்கொண்டிருந்தது.
இந்தக் கேள்விகள்
எனக்கு மட்டும்தானா?
அப்படியானால்.

நாம் என்று பதில் சொல்லப்போகிறோம்?

*ஆகஸ்டு 15, 2000 அன்று தோழர் நல்லு ஒரு சாலை விபத்தில் பலியானார். உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியில் அதன் ஆரம்ப காலம் முதல் முன்னணியாக செயல்பட்டு வந்தவர் அவர். தோழரின் மறைவை அடுத்து மதுரையில் நடந்த அஞ்சலி கூட்டத்தில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி மாணவர் ஒருவர் வாசித்த கவிதை இது.*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# வடு

நிறைய இரவுகள்
கடந்துவிட்டன இதுவரையில்
ஒரு சில இரவுகள் மட்டும்
மறக்க முடியாதவைகளாய்.

அப்படி ஒரு இரவுதான் அதுவும்
தூக்கம் வரவில்லை.
கண்களை மூடினால்
நீண்டஇருட்டு.
மகிழ்ச்சி நிரம்பி வழியும்போது
தூக்கம் வருவது கடினம்தான்.

நான்தான்
முதலில் பார்த்தது
புது நோட்டுக்கள்
புதுப் புத்தகங்களை சுமந்துகொண்டு
சாயங்காலம் பள்ளிக்குள் நுழைந்த
பழைய லாரி ஒன்றை.

எப்படியும் வந்துவிடும்
புது நோட்டுக்களும்
புதுப் புத்தகங்களும்
நாளை என் கையில்.

வாங்கியவுடன்
முதல் பக்கங்களை பிரித்து
'மோந்து' பார்க்க வேண்டும்
அவ்வளவு வாசமாய் இருக்கும்.
சலவைக்கு போட்ட
சேலையொன்றை
எப்பொழுதாவது எடுத்து கட்டும்
அம்மாவிடமிருந்து
வருமே ஒரு வாசம்
அதுபோல.

முடிந்தவரை
இந்த வருடம்
எழுத்துக்கள் ஒவ்வொன்றையும்
சித்திரத்தை போல
செதுக்க வேண்டும் புதுநோட்டில்.
ஆசிரியர் வாங்கி பார்த்தால்
ஆச்சரியத்தில்
திளைக்க வேண்டும்.

கையில் இருக்கும்
மயிலிறகுகளை
கணக்கு புத்தகத்தில்தான்
முதலில் வைக்க வேண்டும்.
நாலு நாட்கள் கூட
எடுத்துகொள்ளட்டும்
நல்லகுட்டி போட்டால் சரி.

பக்கத்து தெரு
பாண்டித்துரை வீட்டில்தான்
'நியூஸ் பேப்பர்' இருக்கும்.
அவனும் கூட
என் 'சோடு'தான்
ஆனாலும் தைரியமாய்
என் அப்பாவை
பெயர் சொல்லியே அழைப்பான்.
அவன் கொஞ்சம்
கொடுத்தால் போதும்
அட்டைபோட்டு பெயரெழுதி
அழகாய் வைத்துக் கொள்வேன்.

இந்த உரச்சாக்கு பையை
கண்டால்தான் கடுங்கோபம்.
மாமா புதுப்பை ஒன்று
வாங்கி வரும்வரை,
இதிலேயே புத்தகங்கள்
இருந்து தொலைக்கட்டும்

இன்னும் தூக்கம் வரவில்லை.
நீண்ட விழிப்பிற்கு பிறகு
தூங்கிப் போனேன்.

'பிரேயர்'
நத்தை வேகத்தில்
நகர்ந்து முடிந்தது.

" ஸ்காலர்சீப்
புத்தகம் வந்திருக்கு
பள்ளன், பறையன்,
சக்கிலியெனெல்லாம்
அப்படியே நில்லு !
மத்த எல்லோரும்
வகுப்புக்கு போ "
எரிச்சலும், கோபமும்
கலந்த குரலொன்று
செவிகளை துளைத்தது.

புதுநோட்டுகளும்
புதுப்புத்தகங்களும்
என் அருகில்தான் இருந்தன

ஆனால்,
முந்தைய இரவு போலவே
தூக்கம் மட்டும்
இன்னும் வரவில்லை.

***முகிலன்***

***குறிப்பு:*** *தேனி மாவட்டத்திலுள்ள ஸ்ரீ கிருஷ்ணையர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 80-களில் பணிபுரிந்த கிளார்க் ரத்தினபாண்டி தாழ்த்தப்பட்ட மாணவர்களை மிகக் கேவலமான முறைவில் சாதிப் பெயர்சொல்லி அழைத்து தன் ஆதிக்க ஜாதித் திமிரை தொடர்ந்து நிலை நிறுத்தி வந்ததன் விளைவே இக்கவிதை.*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# வறுமை ஒழிப்பு

பூனைக்கு மெத்தையான
தன் வீட்டு அடுப்புக்கு
சுள்ளிகள் கிடைக்குமென்ற
நம்பிக்கையோடு
விடியற்காலையிலேயே வந்து
கடை விரித்தான்
இருளாண்டிக்கிழவன்.

நடராசர்களின் பாதவரம் வேண்டி
கையில் குத்தூசியோடு
தன் கண்களைப்
பாதையில் விதைத்திருந்த
அந்தக்
காலணி மருத்துவனின்
காலைத் தவத்தைக்
கலைத்தது "போலீஸ் லத்தி".

யோவ் பெரிசு
"மந்திரி"
சாயங்காலம் இங்க
வறுமை ஒழிக்கிறதப்பத்தி
கூட்டத்தில பேசப்போறார்.
அதுக்கு மேடை போடனும்
நீ இப்பவே
எடத்த காலி பன்னு.

– *செங்கதிர்*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# கும்பகோணமும் வேதாரண்யமும்

விடைபெறும் போது
அம்மா இட்டு அனுப்பும்
முத்தங்களை தவிர,
வலிக்கத்தான் செய்கிறது
நீங்கள் ஏற்றிடும்
எல்லா சுமைகளும்.

எந்த சுமையை நான்
குறிப்பாய் கூறுவது,
என் முதுகில் கட்டிய
புத்தகச்சுமை முதல்,
அப்பா தலையில் கட்டும்
ஆண்டுக் கட்டணம் வரை
நெடிதாய் நீள்கிறது
உங்கள் சுமைகளின் பட்டியல்

எங்கள் வீட்டு
மாதச் சம்பளம் முழுவதும்
உங்கள் மடியில் கொட்டினாலும்,
வருடம் தொடங்கிவிட்டால்
வழிப்பறி திருடர்களைப்போல்
நன்கொடை என்று
நச்சரிப்புகள் வேறு.

கேட்காமல் நுழைந்திடும்
என் குட்டி நாயினை போல்,
ஜன்னலுக்குள் காற்று
எப்பொழுதும் நுழைந்தால்
எவ்வளவு சுகமாய் இருக்கும்.
அப்படியா உள்ளது ஶ்ரீ உங்கள்
அடுக்குமாடி வகுப்பறைகள்,
காற்றே கஷ்டப்பட்டு
நுழைந்திடும் ஜன்னல்களில்,
மூச்சுகாற்று வாங்கவே

சிறப்பு கட்டணம்
செலுத்த வேண்டும் போல் உள்ளது.

உங்கள்
வீட்டு கழிப்பறைக்கு
ஒதுக்கிய இடத்தைவிட,
நீங்கள்- எங்களுக்கு
விளையாட தந்த
மைதானத்தின் அளவு
நிச்சயம் சிறியது !
இதில்,
'வீடியோ கேம்ஸ்'
விளையாடுவதே மிகவும் சிரமம்,
பிறகெப்படி முடியும்
ஆசிரியர் கற்பித்தபடி
ஓடி விளையாட?

பிராய்லர் கோழிகளை
ஏற்றிச் செல்லும்
வாகனங்களில் கூட
கொஞ்சம் 'பிரைவசி' இருக்கும்,
எங்களை ஏற்றிச் செல்லும்
உங்களது வாகனங்களில்
ஊசி நுழைந்திடவும்
இடைவெளிகள் இல்லை.
இதில்
பதினெட்டுபட்டிக்கு
ஒரு நாட்டாமை போல,
எல்லோரையும் ஏற்றி இறக்க
குப்பை தொட்டிகளாய்
ஓரிரு வாகனங்கள்.

பயணிக்கும் வழியெல்லாம்
எங்கள் ரத்தம் கேட்டு துரத்தும்
உங்களின் லாப வெறிஞ்,

கேட்டால் எப்படி
கொடுக்காமல் இருப்பது?

இறுதியாக நாங்கள் உங்களிடமே
இறக்கி வைத்துவிட்டோம்.
கனவையும், உயிரையும் சேர்த்து.

கல்வி வள்ளலாய்
வாழும் நீங்கள்
காவு வாங்கியதை மறைத்துவிட்டு
விபத்து என்றே
விளம்பரம் செய்யுங்கள்.

ம்.
எங்கள் முகத்தருகே
மொய்க்கும் ஈக்கள் கூட
சத்தம் செய்கிறது.
உங்களின்
கல்விக் கொள்ளையை அறிந்த
காலம் மட்டும் ஏனோ?
மௌனித்து நிற்கிறது.

***-முகிலன்***

*குறிப்பு : வேதாரண்யம் அருகே ஒரு ஆசிரியர் உட்பட 9 பேர் வேனில் சென்ற போது குளத்தில் விழுந்து பலி. அம்மாணவர்களின் நினைவாக.*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## குழந்தைகளுக்காக சேகரிக்கப்பட்ட யுத்தத்தின் நாணயத்தாள்

குடுமி மலையில் யார் வாழ்ந்தார்கள் என்று
குழந்தைகள் கேட்கிறார்கள்.
அந்த மலையை ஆயுதம் நிரப்பிய
டோராப் படகுகள் ஏன் தாக்குகின்றன என்று
கேள்விகளை முன்வைத்தபடி

யுத்தம் நிகழும்
நாணயத்தாளை பார்த்துக்கொண்டேயிருக்கிறார்கள்.

யுத்தம் ஏதோ ஒரு வகையில் மீள மீள
ஞாபகப்படுத்தப்படுகிறது.
இந்த நாணயத்தாள் அந்த நாள் வரை
நிகழ்த்தப்பட்ட எல்லா அழிவுகளையும்
வரைந்து வைத்திருக்கிறது.

மீட்க சகிக்காத நிகழ்வுகளையும் தோல்வியையும்
நிரப்பி வைத்திருக்கிறார்கள்.
நினைவு கொள்ள முடியாத நாட்களின் கதைகளால்
செய்யப்பட் கேலியான தாளின் வாயிலாக
அச்சம் தரும் காலத்தின் காட்சிகளை மட்டுமே
குழந்தைகளுக்காக சேகரித்து வைத்திருத்திருக்கிறார்கள்.

இந்த விமானங்கள் இன்னும் ஏன்
பசிக்கிற வேகத்துடன் பறந்தலைகின்றன எனவும்
ஹெலிகாப்டர்கள் இன்னும் ஏன் மிகவும் இறக்கமாக
பறந்து திரிகின்றன எனவும்
இந்தத் குழந்தைகள் கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள்.

வரலாற்றுள் ஒளிந்து கொள்ளுவதற்காய்
புனிதத்தை பூசிய
பின்பக்கமாக பதிந்திருக்கிற
குற்றம் நிரம்பிய முகத்தின் புன்னகையையும்
திசை நோக்கியிருக்கிற கைகளையும்
நான் மொழிபெயர்த்து கூறமுடியாதபடியிருக்கிறேன்.
எதற்கும் இந்த நாணயத்தாளை தூக்கிக்கொண்டும்
கைகளுக்குள் வைத்துக்கொண்டும்
வாழ வேண்டியிருப்பதுடன்
அதற்காக உழைக்கவும் வேண்டியிருக்கிறது.

எரிந்து போயிருக்கிற தேசத்தில் செயின்பிளக்குகள்
இன்னும் ஏன் நிலத்தை பிய்க்கின்றன என
நான் கேட்கிறேன்?
இரணைமடுக்குளத்தினுள் அச்சம் தருகிற
உருவங்கள் இறங்குகின்றன.
எரிந்துபோன தேசத்தை தின்னும் நடவடிக்கையும்

மறுபக்கத்தில் உள்ள புன்னகையையும் விலக்க முடியாதபடி
ஒன்றின்மேல் ஒன்றாய் படிந்திருக்கிறது.
இந்த அரசன் ஏந்தியிருக்கும்
கூர் வாள் எனது குழந்தைகளை
இனிவரும் எல்லாக் காலங்களிலும் குத்தப்போகிறது.

தந்தையே எங்கள் கடலை யார் குடித்தார்கள்?
என்று எனது குழந்தைகள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.
பெரிய கொடியை எதன்மீது நாட்டினார்கள் எனவும்
அங்கு யாருடைய குருதி கொட்டியிருக்கிறது எனவும்
அங்கு குடியிருந்தவர்கள்
எங்கு துரத்தப்பட்டார்கள் எனவும்
எனது எதிர்காலக் குழந்தைகள் கேட்கப்போகிறார்கள்.

தங்களுக்காக சேமிக்கப்பட்டிருக்கிற நாணயத்தாள்களில்
நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற
படைகளின் சாப்பாத்துக்களையும்
தொப்பிகளையும்
அதிகாரம் வளருகிற நட்சத்திரங்களையும்
எல்லாக் குழந்தைகளும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

– ***தீபச்செல்வன்***

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# என்ன செய்யப்போகிறோம்?

விரிந்து கிடந்தது வானம்
வீசியது இளங் குளிர்காற்று
உதயனின் வெக்கை தணிக்க
வெண்குடை பிடித்தன மேகங்கள்
கூடிக் களித்து கலந்து கறைந்தன
கார்கொண்ட மேகத்திரள்கள்

பொழிந்த எள்ளு கொள்ளுந் பேத்திகளை
மடியில் கிடத்தித் திளைத்தனள்
பூமித்தாய்.
அப்பா, என்னே வாசம் இதுவென்றாள்
என் மகள்
மகளின் ரசனை கண்டு மகிழ்ந்தேன்.. ஆனால்,
கேட்பாரற்றுக் கிடந்த கறந்த பசு
தன் வயிற்றெரிச்சலை
ஒரு வாரத்தில் வெளிப்படுத்தியபோது
அந்த நாற்றத்தை நுகர மரத்த என் மூக்கைப்
பெரிதுபடுத்தாத நான்
மகளொடு சேர்ந்து மண்மணத்தை
நுகர்ந்து மகிழ முடியாத மூக்கை
அறுத்தெரிந்தால் என்னவென்று
ஒருகணம் எண்ணினேன்..
வாழ்க ஐ.டி.சி

விரிந்து கிடந்தது வானம்
பரந்து கிடந்தது பூமி
வீசியது இளங் குளிர்காற்று
விரித்த பெரும் பச்சைக் கம்பளத்தில்
விருந்துண்டன ஆநிரைக் கூட்டம்.

அதில் அப்போதுதான் பிறந்திருந்த
பச்சிளங் கன்றொன்று
துள்ளிக் குதித்தாடிய அழகில்
கணம் எனை மறந்தேன்.
பட்டாம் பூச்சி என் முதத்தை
மொய்த்துப் பறந்தது
அறுகிவிட்ட சிட்டுகள் இரண்டு
சீழ்க்கையிட்டுப் பறந்தன
வானில் அம்பெனப் பறந்து வந்த
கொக்குக் கூட்டம்
ஆநிரையோடு பகிர்ந்துண்ண அமர்ந்தது
துள்ளிக் குதித்தது பச்சிளங்கன்று
என்னே சுதந்திர வாழ்க்கை இதுவென
இயற்கையில் கறைந்தேன்.

உலுக்கியது என்னை ஒங்கியதொரு குரல்
சனியன் கயித்த அறுத்துகிட்டு
பயித்த மேயப் போவுது
என்ற வசவு தொடர்ந்தது.
நடுகல்லில் பூட்டிய நீண்ட கயிறு தளர
விளை நிலத்தை நெருங்கிவிட்ட பசு
அடிபட்ட வேதனையில் அரற்றியது
நிலத்தில் விலக்கி நட்ட கருங்கற்கள்
விளையவில்லையே
போட்டிக்கு நாணலும், தட்டையும்,
தருப்பைப் புல்லுமல்லவா மண்டுகிறது
தின்ன என் சுணை நாக்கே அறுபடுதே
பச்சையெல்லாம் பச்சையல்லடா மூண்டமே
நிலமெங்கே, வரப்பெங்கே,
மேச்சத் தரைதான் எங்கே ..
உனக்கும் சோறில்லை
எனக்கும் உணவில்லை.. என
ஒ..வென்றழுதது.
குற்ற உணர்ச்சி என் நெஞ்சைப் பிளந்தது
துள்ளிய என் மனம் துவண்டு படுத்தது

மாட்டுக்கு மூக்கணாங்கயிறு
நாய்க்கு சங்கிலி குதிரைக்குக் கடிவாளம்
குருவிக்குக் கூண்டு
இல்லை இல்லை
இவற்றுக்குச் சுதந்திரம் இல்லை
இயற்கையில் பிறந்து இயற்கையில் வளர்ந்து
செயற்கையால் இயற்கையை
ஆள்பவனாய்ப் பரிணமித்த
மனிதன்தான் சுதந்திரமானவனோ..
எனத் தொடர்ந்த என் எண்ண ஒட்டத்தை
மறித்தது ஒரு மனக்குரல்.
கண்ணால் காண்பதும் பொய்
காதால் கேட்பதும் பொய்
தீர விசாரிப்பதே மெய்
என்றது அந்த செயற்கையின் சூத்திரம்.
இல்லையா..?!

மனதில் விசாரம் குடிகொண்ட வேளையில்
என்காதில் மோகனமாய்த் தொடங்கிய இசை
மூர்க்கமாய்த் தொடர்ந்தபோது
முத்தாய்ப்பாய்ச் சொன்ன இரு சொற்கள்
என் செவிப்பறை கிழித்தன ..
தும் வித்யா தும் தர்மா.
புரிந்தது.. எல்லாம் புரிந்தது.

குதிரைக்குக் கடிவாளம் குதிரை பூட்டுவதில்லையே
மனிதனே கூட
துள்ளித் திரியும் கன்றுக்கு
மூக்கணாங்கயிறு பூட்டுவதில்லையே
ஆனால்.. 'குழவி' ஒன்று 'கல்லில்' இறங்குமுன்பே
சுடுகோலால் குறியிட்டுக் கருத்திருக்கும்
தொப்புள் கொடியாய் கழுத்தை சுற்றிய
சுறுக்குக் கயிறு கண்ணில் தோன்றி மறைந்தது
பெற்றெடுத்து .. கிருஷ்ணன் என்றும்
கண்ணன் என்றும் கருப்பன் என்றும் பெயர்சூட்டுமுன்பே
அதற்குப் பெயர் சூட்டப் பட்டுவிட்டது
இன்ன சாதி இன்ன மதமென்று.

இதை மீறிய ஆய்ந்தறிதல் இல்லை
இதை மீறிய வாழ்நெறியும் இல்லை
இட்டபடி நட என
காலித் தராசை கையில் பிடித்து
சமன் காட்டித் திரிகிறது இந்திய நீதி

அடுத்தவன் மூக்கைத் தொடாத வரைதான்
உனக்குச் சுதந்திரம் என
மெத்தப் படித்தவர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.
இந்த மூக்கு இந்தியாவின் குறுக்கு நெடுக்காய்
நீண்டுகிடக்கிறதே .. கட்டிய கையைப் பிரிக்கமுடியாமல்
இதை என்ன செய்ய?

**– அனாமதேயன்.**

***குறிப்பு:*** *எனக்குக் கவிதை எழுதத் தெரியவில்லை.. ஆனால் இதுபற்றி எழுதவேண்டும்போல் இருந்தது. எனவே என் சமீபத்திய மனப் பதிவுகளைத் திரட்டி, என்னை வதைத்த 'வந்தே மாதரம்' மற்றும் 'லவ் ஜிகாத்' விசயத்தைக்*

*கருவாக்கி ஒரு பெரும் சித்திரம் வரைந்துவிட்டேன். அதில் அவுட் ஆஃப் போக்கசில் வைக்க வேண்டியதையும், ஃபோக்கஸ் பண்ணவேண்டியதையும் படிப்பவரின் பார்வைக்கு விடுகிறேன்.*

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## பசியோடிருப்பவனின் அழைப்பு

மலைகளைப் பகிர்ந்துண்ண
அழைத்தாய்
ஆயிரமாயிரம் வெள்ளிகளைச் சூடிய வானம்
கடல் அலைகளில் தத்தளித்துக் கொண்டிருந்தது
மீண்டும் மீண்டும் அழைத்தாய்
காற்று மர இலைகளில் ஒளித்துக்கிடந்தது
இரவு பனித்துளியாய்
புல்நுனிகளில் தேங்கி வழிந்தது
முதலில்
மலைகளை உண்ணும் நுட்பங்களைப் போதித்தாய்
பிறகு
மலைகளின் சுவை பற்றிய பாடல்களை
இசைத்துக் காட்டினாய்
மழைப் பொழிவுகளுக்குள்
மலைகள் வளரும் அதிசயங்களை
வசியச் சொற்களில் சொன்னாய்
மலைகள் தீர்ந்து போகும் ஒருநாள் வருமெனில்
அப்போது
மலைகளைத் தின்று மலைகளாகிய நாம்
நம்மையே பகிர்ந்துண்டு
பசியாறலாம் என்றாய்

**–சித்தாந்தன்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# பெருநிலம் : உன்னைத் தின்று போட்டிருக்கிறார்கள்

*(இன்னுமின்னும் அறியாத சேதிகள்*
*அந்தப் பெருநிலத்தில் புதைக்கப்பட்டிருக்கின்றன)*

நேற்று உனது புகைப்படம் புதர் ஒன்றிற்குளிலிருந்து
எடுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.
சகோதரியே! உன்னை உரித்து
சிதைத்தவர்களின் கைளிலிருந்து
எங்கள் காலம் நீண்டுகொண்டிருக்கிறது.

கண்டெடுக்கப்படாதவர்களின் சடலங்களுக்கு
என்ன நேர்ந்திருக்குமென்று
தலைகளை இடித்தழும் தாய்மார்களுக்கு
இரத்தத்தால் முடிவுறுத்தப்பட்ட சகோதரிகளுக்கு
உன்னை சிதைத்திருக்கிற புகைப்படம்
எண்ணிக்கையற்ற முனைகளில்
நடந்த கதைகளை சொல்லிக்கொண்டேயிருக்கிறது.

உன்னை சிதைந்து எங்கு எறிந்திருக்கிறார்கள் என்பதையும்
யார் உன்னை தின்றார்கள் என்பதையும்
உனது தொலைக்காட்சியில்
நீயே செய்தியாக வாசித்துக்கொண்டிருக்கிறாய்.
நீ நடித்த பாடல்களும் படங்களும்
ஒளிபரப்பபட்டுக்கொண்டிருக்கிற அலைவரிசையில்
உனது பாதிப்படம் ஒரு மூலையில்
பார்க்கப் பொறுக்க முடியாத கோலமாக தொங்குகிறது.

அதே படைகளினால் கவலிடப்பட்ட
நிலத்தில் எங்கோ ஒரு மூலையில் உனது
தாயைப்போலவே ஒருத்தி
தன் மகளைத் தேடி துடித்துக்கொண்டிருக்கிறாள்.
ஆண்குறிகளை வளர்த்து
இரத்தத்தை படையலிட்டிருக்கிற
படைகளின் யுத்த முனைகளில்
உன் சீருடைகளை
கழற்றி எறிந்திருக்கிறார்கள்.

உன் வீரத்தை கரைத்துவிட்டார்கள்
தொலைந்துபோன உன் துப்பாக்கி படைகளின் கையிலிருக்கிறது

முன்னர் வெற்றியடைந்த களமொன்றிலேயே
நீ சரணடைந்திருக்கிறாய்.
துப்பாக்கிகளும் ஆண்குறிகளும்
ஒரே மாதிரியாய்
வாயைப் பிளந்து உன்னை தின்று போட்டிருக்கிறது.

முற்றத்தில் தெருவில் வயல்களில்
கண்ணிவெடிகளுக்கு கீழாகவும் மண் பிரளும் இடங்களிலெல்லாம்
சீருடைகள் முதலான உடைகளும்
இரத்தமும் சைனைட் குப்பிகளும் புகைப்படங்களும்
மற்றும் சில குறிப்புகளும் கிளம்பி வந்துகொண்டிருக்கின்றன.
என்னிடம் வாங்கிச் சென்ற
கவிதையை எங்கு போட்டிருப்பாய்?
– **தீபச்செல்வன்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## வாக்குக் கடதாசியைச் சரிவரப் பயன்படுத்துவது எப்படி?

அந்தக் கடதாசியை எப்படிப் பயன்படுத்தினாலும்
எதுவுமே மாறாது என்று
அவர்கள் எல்லாருக்கும் தெரியும்.
என்றாலும்
அந்தக் கடதாசி பெறுமதி மிக்கது என்பதால்
அதை வீணாக்கக் கூடாது என்று
அவர்கள் சொல்லுகிறார்கள்.
அதை எப்படிப் பயன்படுத்துவது என்று
சொல்ல மாட்டார்கள்.
பயன்படுத்தத் தெரியவில்லை என்று
உங்கள் பாட்டில் வீட்டில் இருந்து விடாதீர்கள் என்றும்

எப்படியாவது சரியாகப் பயன்படுத்தும்படியுமே
அவர்கள் சொல்லுகிறார்கள்.
அதை விடவும்,
எவரேன் பயன்படுத்த மாட்டார;
என்று அறியும் எவரும்
அதை எடுத்துப் பயன்படுத்தவும் இயலும் என்பதால்
அந்தக் கடதாசியை எப்படிப் பயன்படுத்துவது என்று
ஆராயத் தொடங்கினேன்.

சில கேள்விகளுக்குச்
சரியான ஒரு மறுமொழி மட்டுமே உண்டு.
சில கேள்விகளுக்குச் சரியான மறுமொழி ஒன்றுமேயில்லை.
சில கேள்விகட்குச் சரியான மறுமொழிகள் பல உள்ளன.
வாக்குச் சீட்டைச் சரிவரப் பயன்படுத்துவது
எப்படி என்ற கேள்விக்குப் பல மறுமொழிகள் உள்ளன.
அந்தக் கடதாசியில் உள்ள
சதுரமான சிறிய பெட்டிகளில் ஒன்றிற்குள்
பெருக்கல் அடையாளம் இடுவதோ
இலக்கம் எதையாவது எழுதுவதோதான்
சரியான மறுமொழி என்று சொல்கிற பலர்
எந்தப் பெட்டி என்று சொல்லுவதில்லை.
சொல்லுகிறவர்கள் ஆளுக்காள்
வேறு விதமாகச் சொல்லுகிறார்கள்.
எனவே
அவற்றை விடச் சரியான
வேறு மறுமொழிகளும் உள்ளன என்று
உறுதியாக நம்புகிறேன்.
வரிசையில் நின்று
உங்கள் கைவிரலை அசிங்கப்படுத்தி வாங்குகிற
அந்த வாக்குக் கடதாசியை வீணாக்கலாமோ?
எனவே தான்
வேறு நல்ல பயன்பாடுகளைச் சொல்லுகிறேன்.
தெரிவு உங்களுடையது.

தாள் சதுரமாக இருந்தால்
அதை மடித்துக்
காகிதக் கப்பல், பறவை, தவளை, கடகம், குதிரை
என்று பலவுஞ் செய்யலாம்.

சற்று நீள் சதுரமாக இருந்தால்
ராக்கெட் செய்து வீசி விளையாடலாம்.
இன்னும் நீளம் என்றால்
நீளத் தோணி ஒன்று செய்து தண்ணீரில் விடலாம்.
தாளைக் கசக்கிப் பந்தாக்கி வீசி விளையாடலாம்.
கெட்டியான பற்களும்
வாயில் உமிழ்நீரும் இருந்தால்
வாயிற் போட்டுச் சப்பி உருண்டையாக்கி
ஒரு தேர்தல் சுவரொட்டி மீது எறியலாம்.
தெருவிற் கிடக்கும்
கோழி மலத்தையோ நாய் மலத்தையோ எடுத்து
ஓரமாகப் போடப் பாவிக்கலாம்.
ஆனால் தேர்தல் அதிகாரிகள்
அதற்கெல்லாம் அனுமதிக்க மாட்டார்கள்.
வீட்டுக்குக் கொண்டு செல்லவும் முடியாது.
கிழித்துக் குப்பைத் தொட்டியில் இடலாம்.
கிழிக்க விடமாட்டார்களென்றால் கிழிக்காமலே இடலாம்.
ஆனாற் குப்பைத் தொட்டியெதுவும் அயலில் இராது.
கோவில் உண்டியல் மாதிரி ஒரு பெட்டி.
அதிலுள்ள நீண்ட துவாரத்தின் வழியே தான் போடலாம்.
நேரமிருந்தால்
எல்லாச் சதுரங்களிலும் பெருக்கல் அடையாளமிடலாம்.
அல்லது தாளுக்குக் குறுக்காகப்
பெருக்கல், வகுத்தல், கூட்டல், கழித்தல்
அடையாளம் ஒன்றை இடலாம்.
ஒரு அரிவாளும் சம்மட்டியும் வரையலாம்.
நீளமாக ஒரு கவிதை எழுதலாம்.
வாக்குகளை எண்ணுவோர் தேநீர் பருகும்போது
படிக்கும் வாய்ப்புண்டு.

பட்டியலில் உள்ள எதுவுமே
உங்கள் விருப்பிற்குரியதல்ல என்று சொல்ல
அக் கடதாசியைப் பயன்படுத்த
எத்தனையோ வழிகள் உள்ளன.
வாக்குக் கடதாசியைச் சரிவரப் பயன்படுத்தும்
தெரிவு நிச்சயமாக உங்களுடையது.

**– சி. சிவசேகரம்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## சான்றோர் கூற்று

பெரிய நீதிவான் சொன்னார்
பிறகு பெரிய பாதிரியார் சொன்னார்,
பிறகு பேராசிரியரும் அல்லவா சொல்லுகிறார்,
“பழைய பிழையைச் செய்யாதீர்
புறக்கணித்து உங்கள் வாக்குக்களை வீணாக்காதீர்”
என்று
பழைய பிழை எது?
வஞ்சகர் என்று தெரிந்தும் வாக்களித்ததா?
தெரிந்தால் எவருக்கும் அளிக்காமல் விட்டதா?
குறுக்குக் கேள்வி கேட்காதீர்
பேராசிரியரும் பெரிய பாதிரியும் நீதவானும்
தெரியாமலா சொல்கிறார்கள். தகைமைசால்
பேரறிஞர்மாரெல்லாம் ‘பேசாப் பொருளைப்
பேசவுந் துணிவதற்கு’
நீங்கள் யார்?
படிப்புண்டா? பட்டமுண்டா?
பதவியேதுந் தானுண்டா? - இல்லை
பத்திரிகை எசமானர் ஆசிகளேன் உமக்குண்டா?
போடென்று சொல்லுகிற பெரியோர்கள் எல்லோரும்
யாருக்குப் போடென்றோ
எதை நம்பிப் போடென்றோ
ஏன் சொல்ல மாட்டார்கள்?

இருட்டு அறைகளுக்குள் இரகசியமாய் முடிவெடுத்து
அஞ்சுங் கெட்டு அறிவுந்தான் கெட்டொழிந்தோர்
ஆலோசனையெல்லாம் அம்பலத்தில் சொல்லி வைத்து
ஊர் சிரிக்கத் தங்களது
பேர் கெட்டுப் போவதற்குப்
பெரியோர் விரும்புவரோ?
பெரிய நீதவான் சொன்னார்,

பெரிய பாதிரியார் சொன்னார்,
பேராசிரியருஞ் சொன்னார். போதாதா?
எனவே,
குறுக்குக் கேள்விகளை உரக்கவே கேட்காதீர்
பதில் கிடைக்கப் போவதில்லை
உரிய பதிலை நீங்களே உணருங்கள்.

**– பரதேசிப் பாவாணர்**

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## பிரிந்த தோழிக்கு

கையசைத்து கணவனை
வழியனுப்பிய பிறகு
கதவுகள் தாழிட்டால்,
நீயும் நானும்
வண்ணத்துப்பூச்சிகளாய்
விளையாண்ட பொழுதுகள்
மனதுக்குள் வந்தமரும்.

குடைகள் நம்மிடம்
இருந்த போதும்
நனைந்து கொண்டே
வீட்டுக்கு சென்ற நாட்கள்,
ஜன்னல் வழியாக
மழை பார்க்கும் போதெல்லாம்,
கிழிந்த குடைக்குள்
இறங்கும் நீர்த்துளியாய்
நினைவுகளின் வழிந்திடும்.

உன் பிறந்த நாளொன்றுக்கு
அழகிய தோடுகள் இரண்டு
அணிந்து வந்தாய்,
அதுபற்றி நான் கேட்க

அப்பா பட்ட கஷ்டம் பற்றி
அழுதே தீர்த்து விட்டாய்,
நிறைய நகையணிந்து,
மணக்கோலத்தில் ஒருநாள்
நான் நின்ற போது
நீ அழுத நிமிடங்கள்தான்
நினைவில் வந்தது.

நம் கனவு இல்லம் பற்றி
விளையாட்டாய்
நீ வரைந்த கோடுகள்தான்
நிஜத்தில் இப்பொழுது
என் வீடாய் நீண்டுகிடக்கிறது.
ஆனால்,
சமையலறை ஒன்றை தவிர
மற்ற அறைகளில்
அதிகம் எனக்கு வேலையில்லை.

உன் கண்ணில் ஒருநாள்
தூசு விழுந்த போது
உதடு குவித்து
ஊதி எடுத்த நிமிடங்கள்,
வீடு முழுவதும்
படிந்திருக்கும் தூசியை ஏ நான்
கூட்டிப் பெருக்கும் போது,
உடன் வந்து ஒரு
உண்மை சொல்லும்,
இவை எளிதில் அகற்ற கூடிய
தூசியல்ல என்று.

பிரிந்த
தோழியே..
பிறகு,
நீயொரு நாள்
வயதுக்கு வந்துவிட்டாய்
அதுபோலவே
நானும் ஒருநாள்.

அத்தோடு
நம் பள்ளிப் பயணங்களும்
பாதியில் நின்றனஞ்
கழட்டி விடப்பட்ட
இரயில் பெட்டிகளாய்.

எல்லாம் இருக்கட்டும்,
நாம் இருவரும்
கைகோர்த்து நெடுந்தூரம்
நடந்த நாட்கள்
எவ்வளவு சுகமானவை
சுதந்திரம் கொண்டவை.

இப்பொழுது நீ
எங்கே
எப்படி இருக்கிறாய் என்று
எனக்கு தெரியாது.
ஆனால்.
நானும் இருக்கிறேன்
என் குழந்தைகளுக்கு
நல்ல தாயாக
என் மாமனார் – மாமியாருக்கு
நல்ல மருமகளாக
என் கொளுந்தனாருக்கு
நல்ல அண்ணியாக
என் கணவருக்கு
நல்ல மனைவியாக
மொத்தத்தில்
என் சுயம் தொலைத்த
வாழ்க்கையொன்றில் ஒட்டியபடி.

என்ன விழிக்கிறாய்,
அதற்கான நிகழ்வுகள்
என்னிடம் நிறைய உண்டு.

இதோ
இன்று கூட,
தெலுங்கானா பிரச்சனை முதல்

ருச்சிகா வழக்கு வரை
சுடும் வார்த்தைகளால் விளக்கிய,
முகம் தெரியா
சகோதரனொருவன்,
“சமூக மாற்றத்திற்கானது
இந்த இதழ்
வாய்ப்பு இருந்தால்
வாங்கி படியுங்கள்” என்று
என்னை பார்க்க,
மௌனமாய் நின்ற நான்
‘வீட்டில் ஆள் இல்லையென்றே’
அனுப்பி வைத்தேன்.

– **முகிலன்**

*குறிப்பு : சென்னை எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் “புதிய ஜனநாயகம்” இதழ் விற்க சென்ற போது, ஒரு வீதியில் குறைந்தபட்சம் நான்கைந்து பெண்களிடமாவது இயல்பாய் இப்பதில் வரும். அப்பதில்களின் விளைவே இக்கவிதை.*

